பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 3 வியாழக்கிழமை (19-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:235



மிருசுவில் படுகொலைகள் தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களான 14 படையினரும் நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். பருத்தித்துறை தம்பசிட்டியில் இயங்கும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றுக்கு 14 படையினரும் இராணுவப் பொலிஸரால் அழைத்துவரப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (ஐ-117-173)

# பொலிஸ் தடைகளையும் மீறி இன்று கொழும்பில் பேரணிகளுக்கு முஸ்தீபு!

## எதிரணிக் கூட்டமைப்பு தன் முடிவில் மிகத்தீவிரம்

கொழும்பு,ஜூலை19

**ஊர்வலங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கும் உத்தரவைப் பொலிஸ் மா அதிபர் நேற்று விடுத்துள்ள போதிலும் -**

**அந்தத் தடையையும் மீறி திட்டமிட்டபடி தலைநகர் கொழும்பில் இன்று அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி உட்பட அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.**

சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறுவதையொட்டி ஊர்வலங்கள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதான அறிவிப்பை பொலிஸ் மா அதிபர் கொடித்துவக்கு நேற்று வெளியிட்டிருந்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தடுக்கும் நோக்குடன் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தமை, சர்வஜன வாக்கெடுப்புப் போன்ற ஜனாதிபதியின் நடவடிக்கைகளைக் கண்டித்து -

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் நாடாளு

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்வலங்களுக்கு நாடு முழுவதிலும் தடை!

கொழும்பு, ஜூலை19

அடுத்த மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பை ஒட்டி நாடெங்கிலும் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாகச் செய்திக் குறிப்பு ஒன்றையும் அவர் விடுத்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து சர்வஜன வாக்கெடுப்பு முடியும் தினம் வரை இந்தத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் அந்தச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேரியல் அணி எம்.பி. வீட்டின் மீது நேற்றிரவு குண்டுத் தாக்குதல்

### பொலிஸார் நால்வர் காயம்

மட்டக்களப்பு,ஜூலை19

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் யு.எல்.எம். மொஹிதீனின் சம்மாந்துறையில்) உள்ள வீட்டின மீது நேற்றிரவு 8.30 மணியளவில் குண்டு வீசப்பட்டதில் அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த நான்கு பொலிஸார் காயமடைந்தனர்.

காயமடைந்த பொலிஸார் உடனடியாக அம்பாறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

குண்டுத் தாக்குதலால் மொஹிதீனின் வீட்டிற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. தாக்குதல் நடந்த அச்சமயம நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## ஜாவத்தை சமிட் பிளட்ஸில் இருந்து சித்தார்த்தன், சுரேஸ் வெளியேற்றப்பட்டனர்

கொழும்பு,ஜூலை19

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பாதுகாப்புடன் தங்குவதற்காக கொழும்பு ஜாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள 'சமிட்' வீடமைப்புத் திட்டத்தில் இரு வீடுகளில் தத்தமது குடும்பங்களுடன் தங்கியிருந்த புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்(சுரேஸ் அணி) செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் அவ்வீடுகளில் இருந்து நேற்று வெளியேற்றப்பட்டனர்.

அதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள 'சமிட்' வீடமைப்புத் திட்டத்தில் முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கு வீடுகள் வழங்கப்படுவது வழக்கமாகும்.

இந்தவகையில் -

(14ஆம் பக்கம் பார்க்க)

### சபாநாயகர் வெளிநாடு பயணம்

கொழும்பு,ஜூலை19

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு நேற்றுப் பயணமாகியுள்ளார்.(ம-3)

### மட்டக்களப்பில் கிளைமோர் தாக்குதல்

மட்டக்களப்பு,ஜூலை19

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நேற்றுக்காலை 10.00 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் விசேட அதிரடிப் படையினர் பயணம் செய்த கவசவாகனம் ஒன்று சிக்கித் தூக்கி வீசப்பட்டது.

அதில் பயணம் செய்த விசேட அதிரடிப் படையினர் இருவர் காயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7-21)

### விமானத் தாக்குதல்

கொழும்பு,ஜூலை19

முல்லைத்தீவுக் கடற்கரைக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் படகுகள் மீது விமானப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. நேற்றுக் காலை 7.40 மணியளவில் முல்லைத்தீவுக் கடற்பகுதியில் கடற்படையினர் புலிகளின் எட்டு வள்ளங்களைக் கண்டனர். கடற்படைப் படகு அந்த வள்ளங்களை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை வழக்கு அ'புரம் நீதிமன்றுக்கு மாற்றம்

வடமராட்சி,ஜூலை19

கடந்த டிசெம்பர் மாதம் மிருசுவில் பகுதியில் ஐந்து வயதுச் சிறுவன் உட்பட எட்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைகுழியில் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான பூர்வாங்க வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றில் இருந்து அனுராதபுரம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு நேற்று மாற்றப்பட்டது.

இந்த வழக்கின் சந்தேகநபர்களான 14 படையினரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொலையுண்டோரின் உறவினர்கள் சோகம் தாளாமல் கதறி அழுதனர்!

### மண் அள்ளி வீசித் திட்டவும் செய்தனர்

வடமராட்சி,ஜூலை19

மிருசுவில் புதைகுழி படுகொலை வழக்கு அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுவதான அறிவிப்பை அடுத்து நீதிமன்றத்தில் கூடியிருந்த பொதுமக்கள் கோவெனக் கதறி அழுதனர்.

கொல்லப்பட்ட எண்மரின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனச் சுமார் நூறு பேர் வரையில் நீதிமன்றத்தில் கூடியிருந்தனர்.

வழக்கு விசாரணை முடிந்து சந்தேகநபர்கள் வெளியே அழைத்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## படமெடுத்த செய்தியாளரை தாக்கிய சந்தேக நபர்!

வடமராட்சி,ஜூலை19

மிருசுவில் புதைகுழிப் படுகொலைச் சந்தேகநபர்களான 14 படையினர் நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்ட சமயம் அவர்களைப் படம் எடுத்த ஊடகவியலாளர் ஒருவர் முதலாவது சந்தேக நபரால் தாக்கப்பட்டார்.

முதலாவது சந்தேகநபரான ஆர்.எம்.எஸ். ரத்னாயக்கவே இந்த ஊடகவியலாளரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தை அங்கு நின்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



மிருசுவிலில் கடந்த ஆண்டு டிசெம்பரில் வீடு பார்க்கச் சென்ற பொதுமக்கள் எட்டுப்பேர் கொன்று புதைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான படையினர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்ட சமயம் கொலையுண்டோரின் உறவினர்கள் நீதிமன்றுக்கு வெளியே கூடிநின்றனர்.

பிள்ளைகள், கணவன்மாரைப் பறிகொடுத்த சோகத்தில் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற உறவினர்களைப் படத்தில் காணலாம். தாய் ஒருவர் மண்ணை வாரி அள்ளி படையினரைத் தூற்ற முனைகிறார். (ஐ) *(படங்கள்:- வடமராட்சி, தென்மராட்சி செய்தியாளர்கள்)*

# பல்கலை மாணவர்கள் கல்வி பயில்வதற்கு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குக!

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் மிகவும் பதற்றத்துடனும் அச்சத்துடனும் அமைதியின்றிக் காணப்படுகின்றனர். இந்நிலைமையில் தொடர்ந்து அமைதியாகக் கல்வி கற்க முடியாத நிலையில் உள்ளனர். எனவே பாதுகாப்பான - அச்சமற்ற - அமைதியான சூழ்நிலையை உறுதிப்படுத்த வேண்டும்.

- மேற்கண்டவாறு யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையிடம் கோரியுள்ளனர்.

யாழ்பல்கலைகழகத்தைத் திறககுமாறு வலியுறுத்தி ஒன்றியம் அவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 10 ஆம் திகதி பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக பத்திரிகைவாயிலாக அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல்கலைக்கழகம் திறக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் அனைவரும் நிர்க்கதியான நிலையில் வீதியில் விடப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்களின் விரிவுரைகள், பரீட்சைகள் என்பன முற்றாகத் தடைப்பட்டுள்ளன. மாணவர்கள் பெரும் மன அழுத்தத்திற்குள்ளாகியுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் எவ்வித கலவரங்களும் இடம்பெறவில்லை; சொத்துக்கள் எதுவும் சேதமாக்கப்படவில்லை. இந்நிலையில் எவ்வித காரணங்களுமின்றி பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. எனவே உடனடியாக பல்கலைக்கழகத்தினைத் திறக்கத் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

பல்கலைக்கழகம் மூடப்பட்டமைக்கான காரணம் தெளிவாக - எழுத்து மூலம் - தெரியப்படுத்தப்படவேண்டும்.

அத்துடன் மாணவர்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் மிகவும் பதற்றத்துடனும் அச்சத்துடனும் அமைதியின்றிக் காணப்படுகின்றார்கள் இந்நிலைமையில் தொடர்ந்து அமைதியாகக் கல்வி கற்க முடியாத நிலை உள்ளது.

எனவே பாதுகாப்பான - அச்சமற்ற - அமைதியான - சூழ்நிலையைத் தாங்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

காரணமின்றி மூடப்பட்ட பல்கலைக்கழகத்தை ஒரு சில தினங்களுக்குள் அரசு திறக்கவேண்டும். தவறும் பட்சத்தில் அதனால் ஏற்படும் விளைவுகளுக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பொறுப்பல்ல என்பதனையும் அத்தகைய பாரதூரமான விளைவுகளுக்கு அரசும் பல்கலைக்கழகத்தினை மூடுவதற்கு ஆலோசனை வழங்கிய விஷமிகளுமே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்பதனை மிகவும் மன வருத்தத்துடன் தெரியப்படுத்த விரும்புகின்றோம் - என்றுள்ளது. (உ-3)

# அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளதை அடுத்து இலங்கைக்கு செல்வதை தவிர்க்குமாறு அமெரிக்க பிரஜைகளுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை19

இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் அங்கு செல்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்கா தனது பிரஜைகளுக்கு அறிவித்துள்ளது.

இலங்கையின் நிலை தொடர்பாக அண்மையில் அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இலங்கை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடக்கி வைத்துள்ளார். இதனை அடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

அரசின் முடிவை எதிர்த்து எதிர்க்கட்சிகள் மிகப்பெரிய அளவில் எதிர்ப்புப்போராட்டங்களை நடத்தவுள்ளன. இதனால் அங்கு மேலும் குழப்பங்கள் ஏற்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்தே தனது பிரஜைகளை இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெறக் கூடிய போராட்டங்கள் அமெரிக்காகளுக்கு எதிரானவை அல்ல. எனினும் உங்களின் பாதுகாப்பை முன்னிட்டு அங்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று இராஜாங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)


NEW SCIENCE COLLEGE
JAFFNA

2003 A/L
அலைகளும்
அதிர்வுகளும்
SAT., SUN.
7.00 a.m. - 8.00 a.m.
ஆரம்பம் 21.07.2001
(90228)

2002
PAPER CLASS
TUE., THU.
6.00 a.m. - 7.15 a.m. (பிரிவு I)
SAT., SUN. 3.00 p.m. - 4.00 p.m.
(பிரிவு II)
நடைபெறுகின்றன.


## அரசின் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிரான

# எதிர்க்கட்சிகளின் போராட்டத்திற்கு பல்கலை பேராசிரியர்களும் ஆதரவு

கொழும்பு,ஜூலை19

எதிர்க்கட்சிகள் கூட்டாக மேற்கொள்ளவிருக்கும் ஜனநாயக பாதுகாப்பு வெகுஜன இயக்கப் போராட்டத்துக்கு அனைத்துப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் நிறைவேற்று அதிகாரிகளும் தமது முழு ஆதரவை வழங்குவதாகவும் மக்கள் கிளர்ச்சியில் நேரடியாகக் கலந்துகொள்ளப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை கொழும்பு நிட்டன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிறைவேற்று அதிகாரிகள் சங்கப்பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

சங்கத்தின் அமைப்பாளர்களுள் ஒருவரான கொழும்புப் பல்கலைக்கழக அரசியல்துறைப் பேராசிரியர் கலாநிதி டபிள்யூ.எம்.கருணதாச இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

பொதுமக்களின் ஏகோபித்த கிளர்ச்சிக்கும் எதிர்ப்பிற்கும் முகம் கொடுக்க முடியாத அரசாங்கம் ஊர்வலங்களுக்குத் தடைவிதித்துப் பாடசாலைகளையும் மூடிவிடுகிறது.

தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அரசு மக்களுக்கு எதிராக சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறது. இதனால் ஆத்திரம் கொண்டுள்ள மக்கள் அந்தச் சட்டத்தை உடைத்தெறியவும் தயாராகவே இருக்கின்றனர். இதனைத் தடைசெய்ய எந்தச் சக்தியாலும் முடியாது.

எதிர்க்கட்சியினர் கூட்டாக ஆரம்பித்துள்ள ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வெகுஜன இயக்கத்தின் சகல நடவடிக்கைகளிலும் ஐக்கிய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் - நிறைவேற்று அதிகாரிகள் சம்மேளனம் தீவிரமாகக் கலந்துகொள்ளும். ஊரடங்குச்சட்டம் போட்டு இன்று ஊர்வலங்களைத் தடைசெய்தால் நாளை இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியே தீருவோம்.

எங்கள் மீது அடிதடிப் பிரயோகம் மேற்கொண்டாலும், கைது செய்தாலும் கவலையில்லை. நாம் சிறைக்குச் செல்லவும் தயாராக இருக்கின்றோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி இன்று அரசியல் அமைப்பை மாற்றவேண்டும் என்கிறார். 1994ஆம் ஆண்டிலேயே இதைச் செய்யப்போவதாகக் கூறித்தான் அவர் ஆட்சிக்கு வந்தார். கடந்த ஆறு வருடங்களாகக் கண்களை மூடிக்கொண்டு இருந்தார். இன்று பெரும்பான்மை இழந்து ஆட்சி கவிழும் நிலையில் அவருக்கு ஞானம் ஏற்பட்டது வேடிக்கையாக இருக்கின்றது.

நாமும் ஆரம்பம் முதலே அரசியல் அமைப்பின் ஒரு பகுதியை அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்பதில் உறுதியாகவே இருக்கின்றோம்.

இப்பொழுது எவருக்குமே தெரியாத, கண்ணால் பார்க்காத அரசியல் அமைப்புக்கு மக்களின் கருத்தைக் கேட்கின்றார் ஜனாதிபதி.

அரசாங்கம் கண்மூடித்தனமான செயலைச் செய்யும்போது பொதுமக்கள் கிளர்ந்தெழுவது இயற்கை. அரசாங்கம் சட்டத்தைத் தன் கைகளில் வைத்துக்கொண்டு பொதுமக்கள் மீது அடக்குமுறையை மேற்கொண்டு அராஜகச்செயலில் இறங்கினால் இங்கும் மக்கள் பங்களாதேஷில் ஏற்பட்டது போன்ற நிலையை ஏற்படுத்தத் தயங்கமாட்டார்கள்.

ஜனநாயக ரீதியாக நடத்தும் உரிமைப் போராட்டங்களை அரசு தடைசெய்யக் கூடாது. இன்று தடைவிதித்தால் இப்போராட்டம் நாளை தொடரும் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்புக்கு 60 கோடி ரூபாவைச் செலவிடப்போகிறது. இதில் ஒரு பகுதியைச் செலவிட்டால் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

அரசாங்கம் சாதாரண மக்கள், மாணவர்கள், பட்டதாரி மாணவர்கள், புத்திஜீவிகள் என எல்லாப் பிரிவினரையும் அடக்கியாள முனைகிறது. இதற்குப் புத்திஜீவிகளான நாம் இடமளிக்க முடியாது.

இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உட்பட அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் இணைத்தே இந்த அமைப்பை உருவாக்கியுள்ளோம்.

(13ஆம் பக்கம் பார்க்க)


உ
இந்தன் முத்து விநாயகர் துணை

## இறைப்பணி பாராட்டு இதழ்

02. 07. 2001 இல் புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் அவ்வூர் மக்களினால் வாழ்த்தி வழங்கப்பட்ட இறைப்பணி இதழ்.

ஆலய மகா கும்பாபிஷேகத்தை ஒட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய நேரடி அஞ்சலில் இந்த இதழ் வாசிக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்டது.

"செயற்கரிய செய்வார் பெரியார்"
தன்னலம் தன்னுயர்வு என
தரணியிலுள்ளோர் தவிப்பெய்தும் காலமிதில்
இறைபணி, பொதுப்பணி செய்து
இங்கிதமாய் நல்லறம் பல செய்யும்
நல்ல மகன், வல்லமகன்;

"கங்கை வேணியன்"

புனித பூமியாம் புளியங்கூடல் செய்த
புண்ணியத்தின் காரணத்தால்
புன்னகையுடன் எழுந்தருளியிருந்த ஐங்கரன்
நாட்டின் நிலைவரங்களால் நலிவிழந்து
பொலிவிழந்து போயிருந்த வேளையதில்

ஆலயந்தனை புனரமைத்துப் பொலிவளித்து
கும்பாபிஷேகம் தனைச் செய்வித்து
ஆலயத்தை மட்டுமன்றி ஆலயச் சூழலையும்
ஊரையும் பொலிவு பெறச் செய்தவனிவன்
பொதுப்பணிக்குப் பின்னிற்காத
புனிதனிவன் நீண்டகாலம்
நிலைபெற்று வளம்பெற்று வாழ நாவார
வாழ்த்துகின்றோம் கூடலூர் மக்கள் நாம்.

"ஐங்கரன் துணையிருந்தால்
உன்கரம் பணி செய்யும்"

வாழ்க வளமுடன்

இங்ஙனம்,
புளியங்கூடலூர் வாழ் மக்கள்.

(C/17480)

# 'மெக்காபியா' யூத ஒலிம்பிக்

ஜெருஸலேம்,ஜூலை19

உலகில் வாழும் யூதர்கள் பங்குபற்றும் 'மெக்காபியா' எனப்படும் யூதர்களின் ஒலிம்பிக் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை ஜெருஸலேத்தில் ஆரம்பமாகின. 16 ஆவது தடவையாக நடக்கும் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள பல நாடுகளிலும் இருந்து சுமார் 2 ஆயிரம் யூத விளையாட்டு வீரர்கள் ஜெருஸலேத்தில் ஒன்று கூடி உள்ளனர். 4 வருடங்களுக்கு ஒருமுறை ஜெருஸலேத்தில் நடக்கும் இந்தப் போட்டிகளை பலத்த பாதுகப்புக்கு மத்தியில் இஸ்ரேல் நடத்துவது குறிப்பிடத்தக்கது. (ஒ)



'மெக்காபியா' யூத ஒலிம்பிக் போட்டிகள் நிகழும் விளையாட்டரங்கில் குண்டொன்றைப் பொருத்தும் போது, தவறுதலாக அது வெடித்ததில் இரு பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். சம்பவ இடத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினர் சோதனையிடுவதைப் படத்தில் காணலாம்.

# யூகோஸ்லாவியப் புதைகுழியில் 3 அமெரிக்கரின் சடலங்கள் மீட்பு

வாஷிங்ரன்,ஜூலை19

யூகோஸ்லாவியாவின் சேர்பியாவில் புதைகுழி ஒன்றிலிருந்து 3 அமெரிக்கர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அல்பேனியர்களுக்கு எதிரான இன ஒழிப்பு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட புதைகுழிகளைத் தோண்டும பணிகளின் போதே இந்த அமெரிக்கர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அமெரிக்காவின் இலினோவை சேர்ந்த மூன்று சகோதரர்கள் கொசோவா யுத்த காலத்தில், செர்பியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் -

அவர்கள் மூவரின் உடல்களே தற்போது கண்டு பிடிக்கப்பட்டதாவும் -

வாஷிங்ரன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கைகள் கட்டப்பட்டு, கண்கள் கறுப்புத் துணியால் மூடப்பட்ட நிலையில், இந்தச் சகோதரர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இவர்கள் மிக அருகில் இருந்து சுடப்பட்டு இறந்திருக்கலாம் என்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ஒ)

# மலேசியாவில் அடுத்த மாதம் 4ஆவது தமிழ் இணைய மாநாடு

கோலாலம்பூர்,ஜூலை19

நான்காவது தமிழ் இணைய சர்வதேச மாநாடு மலேசியாவில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதிமுதல் 28ஆம் திகதி வரை தமிழ் இணைய மாநாடும் கண்காட்சியும் மலேசியாவில் நடைபெறும் என்றும் -

தமிழ் இணையத்தின் அவசியத்தையும், அபிவிருத்தியையும் மாநாடும், கண்காட்சியும் பிரதிபலிக்குமென்றும் -

கண்காட்சியின் ஒருங்கமைப்பாளர் ஏ.பி.நாயக்கர் தெரிவித்தார்.

'முன்னேற்றத்துக்கான பாதை' என்ற தொனிப்பொருளில் இந்த வருடத் தமிழ் இணைய சர்வதேச மாநாடு நடைபெறும் என்றும் தெரிவித்த அவர் 'துனியாவிற் - 2001' என்ற பெயரில் கண்காட்சி அமைக்கப்படும் என்றும் கூறினார்.

40 நாடுகளில் வாழும் 7 கோடி 50 லட்சம் தமிழ் மக்களுக்கு இணையத்தின் பயன்களைக் கொண்டு செல்லும் நோக்குடனே மாநாடும், கண்காட்சியும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் அங்கோலாவில் 70 பேர் பலி!

லுவாண்டா,ஜூலை19

மத்திய ஆபிரிக்க நாடான அங்கோலாவில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 70 பொதுமக்கள் பலியானதுடன், 15பேர் காயமடைந்தனர்.

வட மாகாணத்தில் வைரச் சுரங்கங்கள் நிறைந்த நகரான சிங்குவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சுமார் நூறு தீவிரவாதிகள் சம்பவம் நடந்த பகுதியைச் சுற்றி வளைத்துத் தாக்கியதாகவும் -

இதில் 70 பொதுமக்கள் உயிரிழந்ததுடன், 15 பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

அங்கோலா அரசுக்கு எதிராகப் போராடிவரும் இரிடா சியாஸ் கோல் என்ற தீவிரவாத அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# பாகிஸ்தான் சிறைகளில் உள்ள இந்தியப் போர்க் கைதிகள் பற்றி விவரம் சேகரிக்க முஷாரப் ஆணை

இஸ்லாமாபாத்,ஜூலை19

பாகிஸ்தானியச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்தியப் போர்க் கைதிகள் பற்றிய விவரங்களை உடனடியாகச் சேகரிக்கும்படி அதிபர் முஷாரப் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவுடனான போர்கள் மற்றும் எல்லைப்புற மோதல்களில் பாகிஸ்தானியப் படையினிடம் பிடிபட்ட இந்திய வீரர்கள் பலர் பல ஆண்டுகளாக பாகிஸ்தானியச் சிறைகளில் அடைக்கப்பட்டு, அல்லல்படுவதாக அதிபர் முஷாரப்பிடம் ஆக்ரா மாநாட்டின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இதுகுறித்து தீவிர கவனம் செலுத்துவதாக முஷாரப் அப்போது இந்தியத் தரப்பிடம் உறுதியளித்திருந்தார்.

இதனையடுத்தே அதிபர் முஷாரப் நாடு திரும்பியவுடன், இந்தியப் போர்க் கைதிகள் குறித்த விவரங்களைச் சேகரிக்க ஆணை பிறப்பித்ததாக இஸ்லாமாபாத் வட்டாரங்கள் தெரிவித்தன.

குறைந்தது 54 இந்தியப் போர்க் கைதிகள் பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாக இந்தியா பல முறைகள் தெரிவித்தபோதும், பாகிஸ்தான் முன்னர் அவற்றை மறுத்து வந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## மேற்குக் கரையில் இஸ்ரேல் படைகள் குவிப்பு!

டெல்அவிவ்,ஜூலை19

மேற்குக்கரைப் பிரதேசத்தில் வன்முறைகள் பெருகியுள்ள நிலையில், அங்கு கனரக ஆயுதங்கள் சகிதம் பெருமளவு இஸ்ரேலியப் படைகள் குவிக்கப்படுகின்றன.

பலஸ்தீனர்களின் தற்கொலைத் தாக்குதல்களிலிருந்து யூதர்களைப் பாதுகாக்கவே தமது படைகள் அனுப்பப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்தது.

ஆனாலும் பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் தனது படைகள் நுழையுமா என்பது பற்றி இஸ்ரேல் உறுதிப்படுத்தவில்லை. (ஒ)

## ஒரிஸாவில் வெள்ளத்துக்கு 40 பேர் பலி!

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் கடந்த 15 நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பெரும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. இதுவரை வெள்ளத்துக்கு 40 க்கும் அதிக மானோர் பலியாகியுள்ளனர். கடலோர மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

நூற்றுக்கணக்கான கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

## ஸம்பியாவில் உணவுப் பற்றாக்குறை

லூஸாகா,ஜூலை19

ஆபிரிக்காவின் மத்திய பகுதி நாடான ஸம்பியா உணவு உதவி வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் சுமார் 20 லட்சம் மக்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்குவதாகவும் -

உலக அரங்கில்

98 ஆயிரம் தொன் தானியங்கள் கிடைத்தாலேயே, உணவுப் பஞ்சத்தை ஓரளவுக்கேனும் தடுக்க முடியுமென்றும் ஸம்பியாவின் உதவி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உணவுக் கையிருப்பு மோசமாக சீரழிந்ததாலேயே ஸம்பியாவில் இந்த நிலைமை உருவாகியதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

## நேபாளப் பிரதிப் பிரதமர் பதவி விலகல்

காத்மண்டு,ஜூலை19

நேபாளத்தில் பிரதிப் பிரதமர் பதவி விலகியுள்ளார். பிரதமர் ஜீ.பி. கொய்ராலாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடே பிரதிப் பிரதமரின் பதவி விலகலுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

மன்னர் ஜியானேந்திரா பிரதிப் பிரதமரின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டார்.

## இந்தியாவில் நிலச்சரிவு; 25 பேர் மரணம்!

டேராடூன்,ஜூலை19

இந்தியாவின் உத்திராஞ்சல் மாநிலத்தில் பெய்துவரும் தொடர் மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் புதையுண்டு 25பேர் இறந்துவிட்டதாக அஞ்சப்படுகிறது.



ஹொலண்டில் உள்ள மணல் சிற்பப் பூங்காவில் 20 மீட்டர்கள் உயரமான மணல சிற்பத்தை அமைக்கும் பணியின் கடைசிக் கட்ட வேலைகள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். உலகில் அதிக உயரமான மணல் சிற்பத்தை அமைக்கும் முயற்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 60 சிற்பக் கலைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் ஹொலண்டில் நடைபெறும் மணல் சிற்பக் கண்காட்சியில் இந்த வருடத்தின் தொனிப் பொருள், மாயாஜாலக் கதைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீனர் மீது விமானத்தாக்கு!

பெத்லஹேம்,ஜூலை19

யூத ஒலிம்பிக்கைக் குழப்புவதற்காக, வெடிகுண்டைப் பொருத்திய பலஸ்தீனர்கள் இருவர் உயிரிழந்ததையடுத்து பெத்தலஹேமில் பலஸ்தீனக் குடியிருப்புகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்றுமுன்தினம் குண்டு வீச்சு நடத்தின.

இந்தக் குண்டுவீச்சில் பலஸ்தீன தீவிரவாத இயக்கமான 'ஹமாஸ்' அமைப்பின் உறுப்பினர்கள் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர்.

பெண்களும் சிறுவர்களும் தங்கியிருந்த வீடு ஒன்று இஸ்ரேலிய விமானக் குண்டுவீச்சில் நிர்மூலமாகியதாகவும் - இதில் பலர் உயிரிழந்திருக்கலாமென்று அஞ்சப்படுவதாகவும் - பலஸ்தீனர்கள் கூறியுள்ளனர்.



பெத்தலஹேமில் இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் இறந்த பலஸ்தீனர்களது உறவினர்கள் கதறி அழும் சோகக் காட்சி.

# அமெரிக்க நகரில் விரைவில் வாஜ்பாய்-முஷாரப் சந்திப்பு?

இஸ்லாமாபாத்,ஜூலை19

இந்தயப் பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பும் மீண்டும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் சந்திக்க உள்ளதாக பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் அப்துல் சதார் தெரிவித்தார்.

இதேசமயம், பாகிஸ்தானுக்கு வரும்படி, அதிபர் ஜெனரல் முஷாரப் விடுத்த அழைப்பை பிரதமர் வாஜ்பாய் ஏற்றிருப்பதாகவும் -

இதில் அரசு எந்த மாற்றத்தையும் செய்யப் போவதில்லை என்றும் -

இந்திய வெளிவிவகார அமைச்சா ஜஸ்வந்த்சிங் தெரிவித்துள்ளார். (ஒ)

# காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க புனித யுத்தமே ஒரே மார்க்கம்

## தீவிரவாத அமைப்பு அறிவிப்பு

ஸ்ரீநகர்,ஜூலை19

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, புனித யுத்தத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று காஷ்மீர் தீவிரவாத அமைப்பான லஸ்கர் - இ - தொய்பா தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவரான ஹபீஸ் மொகமட் சயீட் நேற்று முன்தினம் லாகூரில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

வாஜ்பாய் - முஷாரப் இடையேயான பேச்சு தோல்வியடைந்ததையடுத்து, இந்தியக் கட்டுபாட்டுக் காஷ்மீரில் தமது நடவடிக்கைகளை இரட்டிப்பாக்கப் போவதாகவும் -

காஷ்மீருக்கான புனிதயுத்தம் தீவிரப்படுத்தப்படுவதன் மூலம் இந்தியா தோற்கடிக்கப்படும் என்றும் -

சயீட் மேலும் தெரிவித்தார்.

ஆக்ரா உச்சிமாநாடு உடன்படிக்கை ஏதும் ஏற்படுத்தப்படாமல் தோல்வியில் முடிந்திருப்பது காஷ்மீரின் கடும்போக்குத் தீவிரவாத அமைப்புகளுக்கு சாதகமாக அமைந்துள்ளதாக ஆய்வாளர்கள் கருதுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# உடன்பாடு ஏற்படாததுக்கு காஷ்மீர் சிக்கலே காரணம்

## பாகிஸ்தானிய அமைச்சர் கருத்து

இஸ்லாமாபாத்,ஜூலை19

ஆக்ரா உச்சி மாநாட்டில் கணிசமான முன்னேற்றம் எட்டப்பட்ட போதும், காஷ்மீர் தொடர்பான சிக்கலினால் இரு தலைவர்களும் கூட்டறிக்கை பற்றி உடன்பாடு காணத் தவறிவிட்டதாக பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் அப்துல் சதார் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போது தெரிவித்தார்.

காஷ்மீர் உட்பட, இந்திய, பாகிஸ்தான் உறவுகள் பற்றி பேச்சில் விரிவாக விவாதிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீர் தீவிரவாதம், போதைப் பொருள் கடத்தல் ஆகிய பிரச்சினைகளை அரசியல் நிலைகளிலும் -

சியாச்சின் எல்லை, வர்த்தகம், பரிவர்த்தனைத் திட்டங்கள், ஆகிய பிரச்சினைகளை அதிகாரிகள் மட்டத்திலும் -

பேசுவதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அமைப்பு முறையொன்றை உருவாக்க இரு நாடுகளும் முயற்சித்ததாக அப்துல் சதார் மேலும் கூறினார். (ஒ)

## ஜப்பான் - தென்கொரியா இராணுவ உறவு துண்டிப்பு

சியோல்,ஜூலை19

ஜப்பானுடனான இராணுவத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதாக தென்கொரியா அறிவித்தது.

தென்கொரியா உட்பட சில நாடுகளுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும், ஜப்பானுக்குச் சாதகமான முறையிலும், ஜப்பானியப் பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் சரித்திரப் பாடப் புத்தகங்களில் கடந்த கால வரலாற்றை ஜப்பான் திரித்து அமைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக தென்கொரியா தெரிவித்தது. (ஒ)

## வில்லூன்றியில் நாளை தீர்த்தமாட வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஆடிஅமாவாசை தினத்தை முன்னிட்டு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தவாரி இடம்பெறவுள்ளது.

வில்லூன்றிப் பிள்ளையார் ஆலயத்தில் காலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்றுத் தொடர்ந்து கோபுர வாசல் தரிசனமும் தீர்த்தவாரியும் இடம்பெறும்.

காலை 8.15 மணிக்குப் பின்னர் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்த மாடவும் பிதிர்த்தர்பணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–7–10)

## கலைநிலா அரங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் மாதாந்தக் கலைநிலா அரங்க நிகழ்ச்சிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை 6–15 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளன.

இந்தக் கலைநிகழ்வில் 'விடலைக்குமுறல்' என்ற நாடகமும் கவின்கலை பயிலக மாணவர்களின் மிருதங்க நிகழ்வு, பரத நாட்டியம், வாய்ப்பாட்டு என்பனவும் மேடையேற்றப்படவுள்ளன.

கலை ஆர்வலர்கள் அனைவரையும் இந்தக் கலைநிகழ்வில் கலந்துகொள்ளுமாறு திருமறைக்கலாமன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ–6)

## முன்பள்ளி விளையாட்டு விழா

நவாலி, ஜூலை 19

அளவெட்டி தெற்கு ஈஸ்வரன் முன்பள்ளியின் 18 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் ஓய்வுபெற்ற உப அதிபர் ம. பத்மநாதன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம. ஞானவேல்ராசாவும், கௌரவ விருந்தினராக அளவெட்டி அரசினர் வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி வை. யோகேஸ்வரனும் கலந்துகொள்வார்கள். (ஐ–100)

## இந்திய மீனவரின் விளக்க மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 28 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் இ. த. விக்னராஜா நேற்று உத்தரவிட்டார்.

இதேவேளை —

பல்வேறு சந்தர்ப்பங்களில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்துக்கைது செய்யப்பட்ட 50 இந்திய மீனவர்களில் 22 பேரை கடந்த 10 ஆம் திகதி கருணை அடிப்படையில் நீதிவான் விடுதலை செய்து கடற்படை அதிகாரிகளுக்கூடாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எஞ்சியுள்ள மீனவர்களை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கவேண்டி இருப்பதால் அவர்களை விளக்கமறியலில் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–6)

களஞ்சியப்படுத்தி வைக்க வசதியில்லை

# இரு கட்ட நிவாரண அரிசியை ஒரே தடவையில் வழங்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

குடாநாட்டு மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்காக எடுத்துவரப்பட்டுள்ள 8 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியையும் களஞ்சியப்படுத்தி வைப்பதற்குரிய களஞ்சிய வசதிகள் இல்லாத காரணத்தால் அரிசியைப் பொதுமக்களுக்கு முன்கூட்டியே வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரு மாதங்களுக்குரிய நிவாரண அரிசியை ஒரேதடவையில் வழங்குவதன் மூலம் களஞ்சியப்படுத்தும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக நிவாரண அரிசியைத் துரிதகதியில் பொதுமக்களுக்கு வழங்கி உதவுமாறும் யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களிடம் கேட்டுள்ளார்.

இந்துருவலி மற்றும் 'பிறைற் ஒவ் சவுத்', ஆகிய கப்பல்களில் எடுத்துவரப்பட்டுள்ள 8 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அவற்றை உடனடியாகப் பொதுமக்களுக்கு வழங்கத் தாம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிவாரணத்துக்கு வழங்கப்படவேண்டிய ஏனைய பொருள்களான சீனி, பருப்பு, பால்மா ஆகியன வழமைபோல் நிவாரணம் வழங்குவதற்கான அனுமதி கிடைத்த பின்பே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ–6)

# அரச ஊழியர்கள் விமானத்தில் பயணம் செய்ய விசேட வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 19

குடாநாட்டில் பணிபுரியும் அரச ஊழியர்கள் தமது அலுவலகப் பணிகளுக்காக விமானம் மூலம் பயணம் செய்யவேண்டுமாயின் முன்கூட்டியே தமது பதிவுகளை யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அதிகாரி கேணல் எம். ஜி. ரத்னாயக்க இது தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளார்.

இது விடயமாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

குடாநாட்டில் பணிபுரியும் அரச அதிகாரிகள் குறுகிய கால அறிவித்தலுடன் கொழும்புக்கு அழைக்கப்படுகின்றனர். அச்சமயத்தில் விமானத்தில் அவர்கள் பயணம் செய்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த ஊழியர்கள் எதிர்நோக்கும்சிக்கல்களுக்குத்தீர்வு காண புதிய நடைமுறை ஒன்றை அமுல் செய்யவிருக்கின்றோம்.

கொழும்புக்கு வருமாறு அறிவித்தல் கிடைத்ததும் அரச ஊழியர்கள் உடனடியாக 021 - 2001 இலக்கத் தொலைபேசியுடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

தமது பெயர் விவரங்களுடன் பயணம் செய்ய உத்தேசிக்கும் தினம், பயணம் மேற்கொள்ள வேண்டிய காரணம் ஆகியவற்றைத் தெரிவித்துப் பதிவுகளைச் செய்யலாம்.

இந்த அறிவிப்பை மேற்கொண்ட பின்னர் தொடர்புடைய ஆவணங்களுடன் யாழ். சிவில் நிர்வாக அதிகாரியைச் சந்தித்து விமான ஆசனத்தை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நேரில் வந்து அல்லது பிரதிநிதி ஒருவரை அனுப்பி இதை மேற்கொள்ளலாம்.

அரச ஊழியர்கள் அசௌகரியங்களுக்கு உட்படாத விதத்தில் உரிய சேவையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ள யாழ். சிவில் நிர்வாக அதிகாரிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இதனால் கேட்டுக் கொள்ளப்படுகிறது — என்றுள்ளது. (ஐ–3)

# பலாலி ஆசிரிய கலாசாலையை வலி. வடக்கில் மீள ஆரம்பிக்குக

## ஒருங்கிணைப்புக்கூட்டத்தில் தீர்மானம்

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மீண்டும் வலி. வடக்குப் பகுதியில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வலி. வடக்குப் பிரதேச செயலாளர் மேற்கொள்ளவேண்டும்.

—இவ்வாறு வலி. வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்வேறு அரச திணைக்களங்களின் தலைவர்களும் கலந்துகொண்ட நேற்றைய கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. (ம–86)

## கிராம அலுவலரை டக்ளஸ் சந்திப்பார்

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பிரதேச செயலக பிரிவு ரீதியாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும். (ஐ–86)

சர்வஜன வாக்கெடுப்பின்போது

# இடம்பெயர்ந்தோர் வாக்களிக்க விசேட வசதிகள் செய்யப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

மாவட்ட ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் வாக்காளர்கள் இடம்பெயர்ந்துள்ள மாவட்டத்திலேயே வாக்களிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

ஒரே மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கு மாற்று ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வாக்களிக்க விசேட ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. அது போன்றே சர்வஜன வாக்கெடுப்புக்கும் ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

பளை மற்றும் சாவகச்சேரி போன்ற பிரதேசங்களிலும், குடாநாட்டில் ஏனைய பிரதேசங்களிலும் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் வாக்களிக்கக்கூடிய வகையில் —

அந்தப்பகுதி பிரதேச செயலர்களின் தெரிவுகளுக்கு ஏற்ப இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ஐ–6)

## முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். பிரதம தபாலகத்துக்குக் கூடுதல் பெறுமதியுள்ள முத்திரை வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன. அவை இன்று வியாழக்கிழமை முதல் விநியோகம் செய்யப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் சி. மார்க்கண்டன் அறிவித்துள்ளார்.

500 ரூபா, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகளே எடுத்துவரப்பட்டுள்ளன. (ஐ–10)

## அன்பளிப்பு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும் பட்டயக் கணக்காளருமான ஏ. சோமசுந்தரம்பிள்ளை இவற்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இக்கதிரைகள் நீண்டநாள்களாக அந்தப் பாடசாலையில் ஆசிரியர்களுக்கான கதிரைக்குநிலவி வந்த பற்றாக்குறை நீங்கியுள்ளது.

## படிவங்களை ஒப்படைக்குக

சாவகச்சேரி வணிக நிலையங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு வங்கிகள் ஊடாகக் கடன் பெறுவதற்கான படிவங்கள் பெற்ற வர்த்தகர்கள், பூர்த்தி செய்த படிவத்தினை நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் அவற்றை மன்ற அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (ம–117)

## சமய சந்நிதிகளில்

அரியாலை, ஜூலை 19

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாள் பிராயச்சித்த அபிஷேகம் இன்று வியாழக்கிழமைகாலை 10. 30 மணிக்கும் அதனைத் தொடர்ந்து மகேசுவர பூசையும் இடம்பெறும். (க–17)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூர உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 7–45 மணி முதல் அபிசேக ஆராதனைகளும் காலை 8–30 மணி முதல் பாளுக்குத் திருமஞ்சன நீராட்டலும் நடைபெறும். அதனை தொடர்ந்து ருதுசோபன வைபவம், வசந்தமண்டபப் பூசை ஆகியனவும் இடம்பெற்று அம்பாள் வெளிவீதி உலாவருவார். (ஐ)

★ ★ ★

பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் தேவாலய வருடாந்தத் திருவிழாத் திருப்பலிகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு முதல் நன்மைத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். நவநாள் திருப்பலிகள் தினமும் மாலை 5 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

கடந்த வருடம் இடம்பெயர்வுகள் காரணமாக இந்த ஆலயத்திருவிழா 2 நாள்கள் மட்டுமே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ–6)

★ ★ ★

யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா திருப்பலிகள் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும் திருவிழாத் திருப்பலி இன்று 'ஏழைகள் வாழ்வில் தீபங்கள் ஏற்றுவோம்' என்ற கருப்பொருளில் வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (ஐ–6)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். வலய பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவிருக்கின்றது.

இன்றும் நாளையும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

### இன்று

★ அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

★ புத்தூர்லட்சி விஷ்ணு ம. வி. எதிர் உரும்பிராய் றோ. க. பாடசாலை.

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானம்)

### நாளை

★ கொழும்புத்துறை யோசெப் வித்தியாலயம் எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்.

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்.

★ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் எதிர் கனகரத்தினம் மகாவித்தியாலயம் (யாழ். பரியோவான் கல்லூரி மைதானம்) (ஐ–3–72)

## உதயன்

### மாயமானைக் கண்டு ஏமாறலாமா?

பல்வேறு அரசியல் குளறுபடிகளுக்கும் குழப்பங்களுக்கும் காரணமான தற்போதைய அரசமைப்பின் கீழ் இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் ஆகியோருக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் ஓரளவு உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற சிறிய கட்சிகளும் தங்களுக்குள்ள மக்கள் செல்வாக்கின் அடிப்படையில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்கின்றன.

இதனால் காலங்காலமாக நாட்டினது தலைவிதியை நிர்ணயித்து, ஆட்டிப்படைத்துவந்த பெருமபான்மையினரின் இரண்டு பிரதான கட்சிகளும் தற்போதைய அரசமைப்பின் கீழ் ஆட்சியை அமைப்பதற்கு அல்லது ஆட்சியைத் தக்கவைப்பதற்கு இந்தச் சிறிய கட்சிகளின் தயவில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில்தான் - தனது அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில்தான் - புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான மக்களின் ஆணையைப் பெறுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு என்ற கோஷத்துடன் களத்தில் இறங்கியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தற்போதைய அரசமைப்பின் கீழ் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாக இரண்டு பதவிக்காலம் பதவி வகித்தவர் அதற்கு மேல் தொடர்ந்து அந்தப் பதவியை வகிக்க முடியாது. எனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய பதவிக்காலம் முடிந்த பின்னர் - இந்த அரசமைப்பே தொடருமாயின் - நாட்டின் தலைவர் பதவியை அவர் தொடர்ந்து தக்கவைக்க முடியாது என்பது திண்ணம்.

இதனால் தற்போதைய நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றி, பிரதமர் தலைமையிலான அரசு அமைக்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்து, தம்மால் இயன்ற காலம் முழுவதும் தலைமைப் பதவியை தம்வசம் தக்கவைக்கவும் -

தற்போதைய அரசமைப்பின் கீழ் சிறிய கட்சிகளுக்குரிய முக்கியத்துவத்தையும், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் ஒழித்துக் கட்டவும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீட்டியுள்ள கபடத்திட்டத்தின் வெளிப்பாடுதான் சர்வஜன வாக்கெடுப்பு என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுவது தவறானது அல்ல என்றே கருதத் தோன்றுகிறது.

சந்திரிகாவின் தலைமைத்துவத்தைக் காப்பாற்றவும், பெரும்பான்மையினரின் பிரதான இரு கட்சிகளையும் மாறிமாறி ஆட்சிப் பீடம் ஏற்றவும் வழிசெய்யும் அரசமைப்புக்காகக் குரலெழுப்ப வேண்டிய - அல்லது அதனை ஆதரித்துச் செயற்பட வேண்டிய - அல்லது அதற்காக முதுகு கொடுக்க வேண்டிய - கடப்பாடோ, கடமையோ, பொறுப்போ ஈழத்தமிழர்களுக்கு இல்லை. வேண்டுமானால் சந்திரிகாவின் 'எடுபிடி'கள் தமது நன்றி விசுவாசத்துக்காக அந்தப் பணியை சிரமேற்கொண்டு ஆற்றி விட்டுப்போகட்டும்.

ஆனால் ஈழத்தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரும் மாற்றம் ஒன்றைக் கொண்டு வரக்கூடிய புதிய அரசமைப்பு முன்வைக்கப்படாத நிலையில் - சமர்ப்பிக்கப்படாத நிலையில் - வெறுமனே கண்ணுக்குத் தெரியாத ஒரு அரசமைப்புக்காக அதனை ஆதரித்து வாக்களிப்பது ஈழத்தமிழர்களைப்பொறுத்தவரை மாயமானைக் கண்டு ஏமாறுவதாகவே முடியும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்வோமாக!

## பட்டினிக்கு எதிரான நிறுவனத்தால் வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 7 பொதுக் குடிதண்ணீர்க் கிணறுகள் புனரமைப்பு

சுன்னாகம்,ஜுலை19

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த மாதம் பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் ஏழு பொது குடி தண்ணீர் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

பனிப்புலம் வெற்றிமடம், வட்டுக்கோட்டை வடக்கு பிளவத்தை, வட்டு. மேற்கு கலட்டி, சுழிபுரம் பெரியபுலோ, அராலி மேற்கு, சுழிபுரம் கிழக்கு, தொல்புரம் முன்கோடை ஆகிய பகுதிகளில் உள்ள பொதுக்கிணறுகளே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இக்கிணறுகள் மூலம் இப்பகுதி மக்கள் நல்ல குடிதண்ணீரைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இக்கிணறுகள் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து சுகாதாரப் பயிற்சிப் பட்டறையும் நடத்தப்பட்டது. இதில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் திட்ட உத்தியோகஸ்தர் க.இராசேந்திரம், கிராம அலுவலர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட இரண்டு கிணறுகள் மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் உடுவில் ஆர்க்லேன் பகுதியிலும், சுன்னாகம் தெற்கு சபாபதிப்பிள்ளை வீதிப் பகுதியிலும் இக்கிணறுகளைப் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடும் நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-27)

## நாட்டு நடப்பு

### போதை - X

மாப்பிள்ளை தண்ணி வெண்ணி
மருந்துக்குமில்லையாம்
எப்பாலும் முழுக்கென்றால்
இடை சுகம் எடுப்பாராம்
தப்பாமல் முழுகச் சொல்லி மாமன்
தன் மாப்பிள்ளைக்கு கட்டளையாம்
மாப்பிள்ளைக்கு கால் என்றால்
மற்றக் கால் மாமனுக்காம்!

- விகடகவி -

### அன்பளிப்பு

சுன்னாகம்,ஜுலை19

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்துக்கு புதிதாக ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஜேர்மனியில் இருக்கும் பொன்னுத்துரை இராஜேந்திரம் என்பவர் தமது தாயாரின் நினைவாக இச்சாதனங்களை வழங்கியுள்ளார். (க-27)

## புதிய விண்ணப்பங்கள் அனுப்புவோருக்கு ஓய்வூதியத்தை துரிதமாக வழங்க விசேட திட்டம் நடைமுறை!

கொழும்பு,ஜுலை19

அரசாங்கப் பணிகளில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கு, ஓய்வூதியங்களைத் துரிதமாக வழங்கும் விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி, பொது நிர்வாக அமைச்சர் ரிச்சட்பத்திரனவின் பணிப்பின்பேரில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ், இரண்டாயிரத்து ஐநூறு ஓய்வுபெற்ற ஊழியர்கள் ஒருவார காலத்துக்குள் தங்களது ஓய்வூதியத்தைப் பெற உள்ளனர்.

இதற்கென 15 கோடி ரூபாவைப் பொது நிர்வாக அமைச்சு திறைசேரியிலிருந்து பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஓய்வூதியத்துக்கான விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெற்றதும், அதற்கு ஒரு இலக்கம் வழங்கப்படும் என்றும் - அந்த இலக்கங்களின் அடிப்படையில் புதிய ஓய்வூதிய வழங்கல்களைத் துரிதப்படுத்த முடியும் என்றும் - அமைச்சு மேலும் தெரிவித்தது. (க-ஒ-9)



சுவிஸ் நாட்டில் அண்மையில் நடைபெற்ற தமிழ் விழா நிகழ்வில் கலந்துவிட்டு யாழ். திரும்பிய திருமறைக்கலாமன்ற நாட்டியக் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் மன்ற அரங்கில் இடம்பெற்றது.

நாட்டியத்தை நெறிப்படுத்திய ஆசிரியை மற்றும் மன்றத்தின் மூத்த கலைஞர் இருவருடன் நாட்டியக் கலைஞர்கள் படத்தில் நிற்பதைக் காணலாம். (ஜ-17)

## கோப்பாய் கலாசாலைக்கு நான்கு விரிவுரையாளர்கள்

காரைநகர்,ஜுலை19

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நிலவும் விரிவுரையாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாற்றும் நான்கு விரிவுரையாளர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இடமாற்றம் பெறவுள்ளனர்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நிலவும் விரிவுரையாளர் பற்றாக்குறை தொடர்பாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் கடந்தத ஞாயிற்றுக்கிழமை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து எடுத்துக் கூறினர்.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பலாலி ஆசிரிய கலாசாலையில் கடமையாற்றிய நான்கு விரிவுரையாளர்களைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இடமாற்றம் செய்வதற்கு அமைச்சர் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளார்.

நான்கு விரிவுரையாளர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இடமாற்றம் பெறுவதால் இங்கு நிலவிய விரிவுரையாளர் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்படும் எனக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் தெரிவித்தார்.

இங்கு தற்போது 485 ஆசிரிய மாணவர்கள் பயிற்சிபெற்று வருகின்றனர். அதிபர் உட்பட 11 விரிவுரையாளர்களே கடமையாற்றி வருகின்றனர். மேலும் 9 விரிவுரையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. (ஜ-73)

### ஆசிரிய கலாசாலை விளையாட்டு போட்டி

காரைநகர்,ஜுலை19

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக கலாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிககு கலாசாலை விளையாட்டு மைதானத்தில் கலாசாலை அதிபர் ம.பரஞ்சோதி தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ் மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சி.கமலநாதன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் பிரதி அதிபர் செல்வி ரி.வேலுப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர். (ஜ-73)

## நலன்புரி நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலிமேற்கு,ஜுலை19

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு இசைக்கருவிகள், விளையாட்டு உபகரணங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

தீவுப்பகுதி, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்ற இளைஞர், யுவதிகளின் உடல், உள வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக கிரிக்கெற், உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம் ஆகிய விளையாட்டு உபகரணங்கள் பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்படவுள்ளன.

அத்துடன் இவர்களுக்கு இசைக்கருவிகளும் விநியோகிக்கப்படவுள்ளன.

கிராம உத்தியோகத்தர்கள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று இது தொடர்பான விவரங்களைத் திரட்டி வருகின்றனர். (ஜ-175)

### பாடசாலைகளுக்கு ஆய்வு கூட உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஜுலை19

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான ஒரு தொகுதி அய்வுகூட உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

எடுத்துவரப்பட்ட உபகரணங்கள் லொறிகளில் எடுத்துவரப்பட்டு யாழ். வலய கல்விப் பணிமனையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இவை தரம் பிரிக்கப்பட்டு ஐந்து கல்வி வலயங்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (க-10)

### நாளை

ஆடி 4
வெள்ளிக்கிழமை
திதி: அமாவாசை
பின்இரவு 2.04 வரை.
நட்சத்திரம் : புனர்பூசம்
பின்இரவு 2.50 வரை.
ஆடி அமாவாசை விரதநாள்
சுபநேரம் : 6.01 - 7.31
ராகுகாலம் : 10.31 - 12.01
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன்னுடைய சொந்த வாழ்வில் அடிக்கடி ஏற்படுகின்ற அனுபவங்களால் மட்டுமல்ல, பிறருடைய அனுபவங்களாலும் பாடம் கற்கும் பிராணி மனிதன் ஒருவனே.

- டெனிக்லான்.

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



வெடிக்காமலிருக்கும் ஒரு யுத்த வெடிபொருள்

# பல்கலைக்கழகத்தை மூடுமாறு உத்தரவிட்ட சூத்திரதாரி யார்?

## அதை அம்பலப்படுத்தக் கோருகின்றனர் மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை19

குடாநாட்டுத் தமிழ்மக்களின் கல்வியின் இதயம் போன்ற யாழ்.பல்கலைக்கழகத்தை எவ்வித நியாயமான காரணமும் இன்றியே மூடுவதற்கு உத்தரவிட்ட சூத்திரதாரி யார்?

அதனை அம்பலப்படுத்தும் வரை மாணவர் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் மன்றம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இது தொடர்பாக மாணவர் மன்றம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டதற்கு யாழ்.தொழில நுட்பக் கல்லூரிச் சமூகம் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது. யாழ்.குடாநாட்டின் கல்வியின் இதயம் போன்ற ஒரு நிறுவனத்தைத் தொடர்ச்சியாக மூடி வைப்பதன் மூலம் குடாநாட்டின் கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச சீரழிக்கும் ஒரு முக்கிய நிகழ்வு இதுவென நாம் கருதுகின்றோம். யாழ். மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகவும் ஆயுதப்படையினரின் அடாவடித்தனங்களை எதிர்த்தும் குரல் கொடுத்தும் வரும் யாழ்.பல்கலைக் கழகத்தைக் கால வரையின்றி மூடுவதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைக்குரலை நசுக்க முடியுமென சிலர் மனப்பால் குடிக்கின்றனர். அதன் ஒரு செயற்பாடே பல்கலைக் கழகம் மூடப்பட்டமையாகும். பல்கலைகழகங்களுக்கு வழங்கப்பட்டு வந்த உரிமையை மறுக்கும் செயற்பாட்டுக்கு எதிராக தமிழ்க் கல்விச் சமூகம் ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுத்த அண்மைய நிகழ்வு என்றும் மறந்துவிட முடியாத ஒன்றாகும். யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கான உண்மைக்காரணத்தை உடனடியாக உரியவர்கள் வெளிப்படுத்தவேண்டும். யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் எந்த வன்முறையிலோ பொதுச் சொத்துக்களைச் சேதமாக்கும் செயற்பாட்டிலோ ஈடுபடவில்லை. யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பல்கலைக்கழகத்தை மூடுமாறு கோரவில்லை.

யாழ்.படைத்தரப்பும் தாம் அவ்வாறு உரிய அமைச்சைக் கோரவில்லை எனத்தெரிவித்துள்ளது. இவ்வாறாயின் யாழ். பல்கலைக்கழகத்தை மூடுமளவு அழுத்தம் எங்கிருந்து வந்தது. அதாவது யாழ். பல்கலைக்கழகத்தை மூடுமாறு தூண்டிய சூத்திரதாரி யார் என சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென முழுத் தமிழ்ச் சமூகமும் விரும்புகிறது. யாழ்.பல்கலைக்கழகத்தைத் திறக்குமாறு அழுத தங்களைக் கொடுப்பதற்காக நாம் பல்கலைக் கழகம் திறக்கப்படும் வரை கறுப்புப் பட்டிகளை அணிந்து விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கவுள்ளோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### நாடாளுமன்றக் கட்டடத்தில் திங்களன்று

## எதிரணிகள் நடத்திய போராட்டத்தில் ஜே.வி.பி. கலந்து கொள்ளாதது ஏன்?

கொழும்பு,ஜூலை19

சட்டத்திற்குப் புறம்பான விடயங்களில் தாம் ஈடுபட விரும்பவில்லை என்றும் அதனாலேயே தாம் நாடாளுமன்றக கட்டடத்திற்னுள் கடந்த திங்களன்று எதிர்க்கட்சிகள் நடத்திய ஆட்சேபக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும் ஜே.வி.பி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஐ.தே.கவினரின் செயற்பாடுகளையும் நடத்தைகளையும் சரியென்று எம்மால் உறுதிகூற முடியாது. இதனால் நாம் திங்கட்கிழமை காலை நாடாளுமன்றத்தினுள் அவர்கள் பொலீஸாரின் தடைகளை உடைத்துக் கொண்டு பிரவேசித்த நடவடிக்கையில் பங்குபற்றவில்லை என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுராகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.க வின் முன்னெடுப்புகள் சபாநாயகரின் அதிகாரத்தை சவாலுக்குட்படுத்துவதாக அமையும் என்று தாம் புரிந்துகொண்டிருந்ததாகக் கூறிய அவர், ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சர்வாதிகாரப் போக்கானவை என்பது ஒருபுறமிருக்க, ஏனைய சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளைத் தாம் எப்படி ஆதரிக்கலாம் என அவர் பிரஸ்தாபித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஐ.தே.க. பல சந்தர்ப்பங்களில் எதிர்க் கட்சிகளின் கூட்டு அபிப்பிராயத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. ஜனாதிபதியுடன் ரணில் விக்கிரமசிங்க இரகசிய சந்திப்பை நடத்தியுள்ளார். எவ்வாறாயினும், நாடாளுமன்றத்தினுள் செல்ல முயன்ற எம்.பிக்களை பொலீஸார் இம்சைப்படுத்திய செயல்களை தாம் கடுமையாக ஆட்சேபிப்பதாகவும் அனுராகுமார திசாநாயக்க குறிப்பிட்டார். (க)


**மனித பாவனைக்கு உதவாத அரிசி தேவை**

கால்நடை தீவன உற்பத்திக்குப் பாவிக்கக்கூடிய மேற்படி அரிசி தேவை. வழங்கக்கூடியவர்கள் முத்திரையிடப்பட்ட கூறுவிலையையும், வழங்கக்கூடிய அளவு என்பனவற்றையும், அரிசியின் மாதிரியையும் 20.07.2001ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பிந்தாது கீழ்க்காணும் முகவரியில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
(C/17465)


## துயர் பகிர்கின்றோம்

**கந்தையா ஸ்ரீவள்ளிநாயகி**

அவர்களின் அகால மரணங்கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் ஆறாதத் துயரமும் அடைந்துள்ளேன். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

டாக்டர் ஈஸ்வரி கந்தையா,
துர்க்கா கொம்மினிக்கேஷசன்,
பட்டின சபை ஒழுங்கை, மானிப்பாய்.
(90206)

## கண்ணீர் அஞ்சலி

புலோலி மேற்கு ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் பிரதமகுருக்கள
**சிவஸ்ரீ அ.மதியாபரணக் குருக்கள்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சிவஸ்ரீ சிவசிதம்பரநாதக்குருக்கள் அனந்தவிஜயக்குருக்கள்**
(மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் பிரதம குருக்கள்)

அவர்கள் 17-07-2001 அன்று மட்டக்களப்பில் காலமாகியதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருடன் சேர்ந்து நாமும் துயர்பகிர்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆத்தியடிப் பிள்ளையார் கோயில்
தர்மபரிபாலன சபையினரும்,
ஆத்தியடி வாழ். மக்களும்.

*ஆத்தியடி,
பருத்தித்துறை.* (90205)

## மரண அறிவித்தல்

**Dr.திருமதி சற்குணதேவி திருக்குமார்**

(ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேசசபை)

இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட Dr.திருமதி சற்குணதேவி திருக்குமார் 13-07-2001 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திருக்குமாரின் அன்பு மனைவியும், சரவணகுமாரன், மயூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா - அமுதவல்லி தம்பதிகளின் அன்பு மகளும், கந்தசாமி - பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஞானவேல், சிவதேவி, தங்கவேல், சக்திவேல், ஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருக்குமாரி, செல்வன்குமார், உதயகுமாரி, கமலகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (14.07.2001) சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.கந்தசாமி
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)

*கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.* (90203)

## உயர்வள்ளல் உமையிழந்து - ஓராண்டு ஓடியதோ...?

## நினைவுப் புஷ்பங்கள்

உருவாய் மண்ணில் 1938 - 01 - 19



அருவாய் மனதில் 2000 - 07 - 29

### அமரர் முருகர் கார்த்திகேசு

(சங்கத்தானை, சாவகச்சேரி)

அப்பாவும் அழகுமுகம் அவனி தன்னில்
அருவிதியால் மறைந்ததுவோ அவலங்கொண்டோம்!
தப்பறியாத் தவமகனே தரணிபோற்றும்
தயாநிதியே தயவிழந்து வாட்டங்கண்டோம்!
எப்புறமும் உம்நினைவு வாட்டஞ்செய்ய
எண்ணியெண்ணி அழுகின்றோம் - இதயம் நொந்தோம்!
செப்பரிய உம்பணிகள் நெஞ்சில் வாழ்த்திச்
சிவனடியில் நீரமர அஞ்சலி செய்தோம்!

★ ★ ★

ஓராண்டு தான்மறைந்து போச்சோ எங்கள்
ஒப்பரிய தலைவனவன் வானம் நண்ணி?
பேராண்ட பெற்றியினன் பெருமை சேர
பெரும்பணிகள் பலகண்ட உயர்வின் வள்ளல்
சீராண்ட "கண்டாவளைக் கார்த்தி கேசு"
செந்தமிழ்போற் புகழளந்த பெருமையுற்று
தாராண்ட செஞ்சடையோன் பாதஞ் சென்றான்
தலைபணிந்து நினைவு உன்னி அஞ்சலித்தோம்!

- குடும்பத்தினர்.

*கல்லூரி ஒழுங்கை,
சங்கத்தானை, சாவகச்சேரி.* (90205)

# சுயதொழிலில் ஈடுபடுவோருக்கான ஓய்வூதியத் திட்டம் இங்கும் அறிமுகம்



எஸ்.அரவிந்தன்
இணைப்பதிகாரி

சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள முறைசார்ந்த, முறைசாராத் துறைகளில் பணிபுரிவோருக்கான ஓய்வூதியமும், சமூகப்பாதுகாப்புப் பிரதிலாபத் திட்டம் ஒன்றினையும், இலங்கை சமூகப் பாதுகாப்புச்சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

1996ஆம் ஆண்டு 17ஆம் இலக்க இலங்கை சமூகப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு பிரதிலாபத திட்டமானது சமூக சேவைகள், மீனவ வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் அங்கம் பெறுகின்ற 'இலங்கை சமூகப்பாதுகாப்புச் சபை' ஊடாக நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரச உத்தியோகஸ்தர்களும், விவசாய மீனவ துறைகளில் ஈடுபட்டுள்ளோரும் தமது வயோதிப காலத்தில் ஓய்வூதியச் சம்பளத்திற்கு உரித்தாவது போன்று சுயமாகத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோரும், தமது வயோதிப காலத்தில் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டின் தேசிய உற்பத்திக்கு இவர்களது பங்கு இன்றியமையாததா



கும். இருந்தும் இத்தகைய சுயமாகத் தொழில்களில் ஈடுபட்டு தமது ஜீவனோபாயத்தை ஓட்டிச் செல்லும் இவர்களுக்கு, எந்தவிதப் பாதுகாப்பினையும வயதான நிலையில் எவரும் அளிப்பதில்லை. எனவே தான் முக்கிய விடயமாக வயோதிப நிலையில் எவரது தயவையும் வேண்டிநிற்காது வாலிப காலத்தில் அவர்கள் நாட்டிற்கு வழங்கிய சேவையை நினைவு கூர்ந்து, ஏனையவர்களுக்கு ஒரு பாரமாக இராது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பினை அளிப்பது என்பதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

### 'சுயதொழில்'

சுயதொழில் என்பது உரிய நபராலேயே மூலதனம் இடப்பட்டு தன்னிச்சையாக நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் வியாபாரமாகும்.

### முறைசாராத்துறை

முறைசாராத்துறை என்பது ஊழியர் சேமலாபநிதி நன்மையில்லாது (E.P.F.) தற்காலிகமாக அல்லது ஒரு குறிப்பிட்ட கால அடிப்படையின் மீது பணிபுரியும் தொழிலாகும்.

இச்செயற்திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கான தகமைகள்:-

1. 18 - 59இற்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும்.
2. சுயதொழில்களில் அல்லது முறைசாராத்துறைகளில் பணிபுரிதல்.
3. மீனவ, விவசாய ஓய்வூதிய சம்பளம் உட்பட வேறு ஏதாவது ஓய்வூதியச் சம்பளத்திற்கும் சேமலாப நிதி நன்மைக்கும் உரித்துடையவராக இல்லாதிருத்தல்.
4. வருமான வரையறையானது வருமான வரி செலுத்துவதற்கு உட்படாத ஒருவராக இருத்தல்.

இத்தகைய தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும் சுயதொழில்கள், முறைசாராத் துறைகளிலான தொழில்கள் சம்பந்தமாக சில உதாரணங்களைக் குறிப்பிடுவதும் முக்கியமானதாகும். அதாவது தொழில்களின் வகை என்ற ரீதியில் விவசாய வேலை, கால்நடை உற்பத்திகளிலான வெளிவாரியான உற்பத்திகள், சிற்றுண்டி உற்பத்திகள், மிருகத் தோல் சம்பந்தமான உற்பத்திகள். (பாதணிகள், கையுறைகள், பிரயாணப் பைகள்) சிரட்டை சம்பந்தமான அலங்கார உற்பத்திகள், கயிறு சம்பந்தமான உற்பத்திகள், கால்துடைப்பு, தும்புத்தடி உற்பத்தி செய்தல், கயிறு இழைத்தல், தளபாட உற்பத்தி, தங்க நகை ஆபரண உற்பத்தி, பித்தளைப் பொருள்கள் உற்பத்தி, மண்பாண்ட உற்பத்தி, தச்சு வேலை, அலங்காரப் பொருள்கள், செங்கல் உற்பத்தி, சட்டி பானை வடிவமைத்தல் போன்ற இன்னும் எத்தனையோ வகையான சுயதொழில்களை நாங்கள் பட்டியல்படுத்த முடியும். அதாவது ஒவ்வொரு துறைகளிலும் உள்ள தொழில்களைக் கண்டறிந்து அத்துறைகளில் உள்ளோரை ஊக்குவித்து அவர்களது உழைப்புக்கு ஒரு பாதுகாப்பினை வழங்குவது நம் எல்லோரது கடமையுமாகும்.

இறுதிவரைக்கும் இலங்கை பூராகவும் இத்திட்டத்தில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் வடக்கு - கிழக்கு நிர்வாக மாவட்டங்களில் இருந்து இத்திட்டத்தில் சேர்ந்துகொண்டோரின் தொகை மிகவும் கணிசமானதாகவே உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் மிகவும் காலதாமதமாக அறிமுகமாகியதும் திட்டம் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் நல்ல முறையில் சென்றடையாமையுமே ஆகும்.

இதனை எழுதும் வரையிலும் வடக்கு- கிழக்கு நிர்வாக மாவட்டங்களில் இத்திட்டத்தில் இணைந்தோர் எண்ணிக்கை 2,200 ஆக உள்ளது. இவற்றிலும் யாழ்.மாவட்டத்தை பொறுத்த வரையில் 324 சுயதொழில் முயற்சியாளர் மட்டுமே இணைந்துள்ளனர். இது வரவேற்கக் கூடியதே. இம்மாவட்டத்தை பொறுத்தவரையில் இது மிக மிகக் குறைவான அங்கத்துவமே. எனவே எதிர்காலத்தில் மிகவும் கூடுதலானோரை இத்திட்டத்தில் இணைத்து அவர்களுக்கு நன்மை அளிப்பதையே ஒரு குறிக்கோளாகக்கொள்ளவேண்டும்.

### செயலகத்தில் அலுவலகம்

'இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை'யினால் நிர்வகிக்கப்படுகின்ற இந்த ஓய்வூதியத் திட்டமானது, நாடளாவிய ரீதியில் நிர்வாக பரவலாக்கத்தை மேற்கொள்ளும் முகமாக மாவட்டங்கள் தோறும் மாவட்ட செயலகத்தில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் உப காரியாலயங்களை அமைத்து, அதனூடாக இந்த வேலைத்திட்டம் மாவட்டங்கள் தோறும் செயற்படுத்தப்படுகின்றன.

இருந்தும் வடக்கு-கிழக்கு நிர்வாக மாவட்டங்களுக்கான இவ்வேலைத் திட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள இலங்கை சமூ கப்பாதுகாப்புச் சபையின் ஊடாக மட்டுமே நடைமுறைப் படுத்தப்



நம்பிக்கையான எதிர்காலம்

படுகின்றது.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புவோர் தத்தமது பிரதேச, கிராம உத்தியோகஸ்தர்களையோ, அல்லது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களையோ தொடர்பு கொண்டு இதற்கான விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொண்டு அவற்றைப் பூரணப்படுத்தி அவர்கள் ஊடாகத் தத்தமது பிரதேச செயலகத்துக்கு சென்று செலுத்தப்பட வேண்டிய உரிய உதவு தொகையினை செலுத்தி தமது அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் பிரகாரம் சேர்ந்துகொள்ள விரும்பும் ஒருவர் இரண்டு முறைகளில் உதவு தொகையினைச் செலுத்திக்கொள்ள முடியும்.

1) தவணை அடிப்படையில் இணைந்துகொள்ளல்,

2) ஒரே தடவையில் பணத்தினைச் செலுத்தி இணைந்துகொள்ளல்.

தவணை அடிப்படையில் சேர்நது கொள்ள விரும்புவோர் தாம் ஓய்வூதியத்திற்கு உரித்தாகும் திகதி வரையும் உதவு தொகையினைச் செலுத்துதல் வேண்டும். - (60வயதில் இருந்து ஆயுள் வரையும் ஓய்வூதியம் வழங்கப்படும்) உதாரணமாக 18வயதில் இணைந்துகொள்ளும் ஒருவர் தாம் ஓய்வூதியத்திற்கு உரித்தாகும் வயதெல்லையான 60 வயது வரையும் உதவு தொகையினைச் செலுத்தது தல் வேண்டும். அதாவது எஞ்சிய (60-18) 42 வருடங்களுக்கும் தவணைக்கு 50ரூபா வீதமாக (மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை) 168 தவணைகள் (42x4 தவணை வருடத்தில்) மொத்தமாக 8,400 ரூபா உதவு தொகையினைச் செலுத்துதல வேண்டும். ஆனால் ஒரே தடவையில திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புகின்ற ஒருவர், 18 வயதை உதாரணமாக எடுப்போமானால் குறித்த நபர் செலுத்தவேண்டிய - உதவு தொகை மொத்தம் 1,920 மட்டுமே ஆகும். இதற்கு மேலதிகமாக எந்த வித கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை. இவ்வாறு இவ்விரண்டு வழிமுறைகளில் ஏதாவது ஒரு முறையின் ஊடாக இணைந்து கொண்ட உதவு தொகையாளர்கள் தமது 60வயதினை அடைந்தவுடன் ஆயுள் வரையும் மாதாந்தம் 2500 ரூபா ஓய்வூதியமாகப் பெற உரித்தாகுவர்கள். (மேற்சொன்ன உதாரண வயதெல்லை உடையவர்) மேலும் இத்திட்டத்தின் பிரகாரம் வயதினை அடிப்படையாகக் கொண்டே செலுத்தப்படவேண்டிய உதவுதொகைகளும், அவர்கள் பெற்றுக்கொள்ளுகின்ற ஓய்வூதிய சம்பளமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இலங்கை வர்த்தமானியில் வெளியான அறிவுறுத்தலின் பிரகாரம் எமது ஓய்வூதியத்திட்டத்தில மேலும் ஓர் அட்டவணையினை நாங்கள் இணைததுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது ஏற்கனவே வெளியான அட்டவணையில் ஆக்ககூடுதலான ஓய்வூதிய சம்பளம் (18 வயதினை உடைய ஒருவருக்கு) மாதந்தம் 2500 ரூபாவாகவே இருந்தது. ஆனால் அதே வயதினை உடைய ஒருவர் இப்புதிய அட்டவணையின பிரகாரம் மாதாந்தம் 5000 ரூபா ஓய்வூதியச் சம்பளம் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவர் இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்குச செலுத்தப்பட வேண்டிய உதவு தொகையில மாற்றங்கள இருப்பது குறிப்பிடத தக்கதாகும். இது சம்பந்தமான விவரங்களை உங்கள் பகுதி கிராம - சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் நீங்கள் அறிந்துகொள்ள முடியும்.

### பிரதிலாபத் திட்டம்

இலங்கை சமூகப்பாதுகாப்பு சபையின் ஊடாக அமுல்படுத்தப் பட்டிருக்கும் சுயதொழில் ஓய்வூதியச் சம்பளம் போன்று இத்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் துரதிர்ஷ்டவசமாகத் தொடர்ந்து தொழில் முயற்சியில் ஈடுபடமுடியாத சூழ்நிலைகள் உருவாகினால் அதாவது, விபத்தினாலோ, இயற்கையாகவோ, ஏதோவொரு காரணத்தினால் அவர்களது உயிருக்கோ, அல்லது உடல உறுப்புக்களுக்கோ பாதிப்பு ஏற்படுமானால் அவற்றினை நிவர்த்திசெய்யும் முகமாக ஒரு பிரதிலாபத்திட்டத்தினையும் அறிமுகப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பிரகாரம் திட்டத்தில் இணைந்து கொண்ட ஒருவர் பூரணமாக ஊனமுறுகின்ற சந்தர்ப்பத்தில் ஒரேயடியாகச் செலுத்தப்படுகின்ற பணக்கொடையாகவும் -

பகுதியளவில் ஊனமுறுகின்ற சந்தர்ப்பத்தில் ஒரேயடியாகச் செலுத தப்படுகின்ற பணக்கொடையாகவும், மரணம் சம்பவித்தால் செலுத்தப்படுகின்ற பணக்கொடையாகவும் வழங்கப்படுகின்றது. இத்தகைய பணக்கொடைகள் யாவும் நிகழும் சம்பவத்திற்கு ஏற்பவும் சம்பவம் நிகழும் காலம் அதாவது வயதினை அடிப்படையாகவும் கொண்டே நிர்ணயிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இத்திட்டம் பற்றிய பூரண அறிவை, ஒரு விழிப்புணர்வினை மேலதிகமாக நீங்கள் பெற விரும்பினால் உங்கள் பகுதி கிராம - சமுர்த்தி, சமூக சேவை உத்தியோகஸ்தர், சமுர்த்தி முகமையாளர், பிரதேச செயலாளர் போன்றோரிடம் பெற்றுக் கொள்ள முடியும் -

**எஸ்.அரவிந்தன்**
*இணைப்பதிகாரி*
*இலங்கை சமூக பாதுகாப்புச் சபை*
*வடக்கு – கிழக்கு மாகாணம்*
*செயலகம், திருகோணமலை.*

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் நோககங்கள் எல்லாம் எதிர்காலத்தில் எல்லோரையும் ஒரே கணிப்பீட்டில் மதிப்பிடுவதே ஆகும். அதாவது நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த அனைவரையும் ஒரே பார்வையில் பார்ப்பதோடு, அவர்களுக்கு இயன்றளவு ஒரு தலைமைத்துவத்தினை வழங்கி அவர்களை கௌரவிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பது சாலப்பொருத்தமானதாகும். ★


உ
சிவமயம்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10
-
01
-
1972



உதிர்வு
19
-
07
-
1999

## கந்தசாமி விவேகானந்தன்

அவர்கள்
(பாபு)

எழிலார் நின்பொன்மேனி மறைந்தின்று
ஈராண்டு ஆனதிங்கே என்றென்றும் நின்னினைவே
விழிகளில் நிறைந்திருந்தாய் வேதனையால் நாமிரங்க
விதியதனை வலிந்தழைத்து மிகவிங்கு மறைந்ததென்ன?

குருநாதர் ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி.
கோமதி எலக்ரிக் வெல்டேர்ஸ்,
உடுப்பிட்டி.

உமது பிரிவால் துயரில் மூழ்கும்:
பெற்றோர், சகோதரர், சகோதரியர்.

(90103)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்து இனவாதம் கக்க ஆரம்பித்துள்ளது அரசு

**தமிழ் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஐ.தே.கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து அரசு சமாதான முயற்சிகளை முற்றாகக் கைவிட்டதுடன் யுத்தவாத - இனவாதப் பேச்சுக்களைக் கக்க ஆரம்பித்துள்ளது.**

**ஆளுங்கட்சிக்கு ஆதரவளிக்க மட்டுமே சிறுபான்மைக் கட்சிகளுக்கு உரிமையுண்டு என்ற விதத்தில் அரசு செயற்படுவதாகக் கூறுகிறார் கட்டுரையாளர்.**

**சிறந்த சிந்தனையாளரும் எழுத்தாளருமான சுனந்த தேசப்பிரிய எழுதி 8.7.2001 ஆம் திகதிய லங்காதீபவில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## அரசின் நிலையை விளக்குகிறார் கட்டுரையாளர் சுனந்த தேசப்பிரிய

ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு சுமார் ஒரு கிழமைக்கு முன்னர் அமைச்சர் அத்தாவுட செனிவரத்னவின் கீழுள்ள ஒருங்கிணைப்பு வேலைத் திட்டத்தின முக்கியஸ்தர்கள் நாட்டின் உயர் இடத்திற்கு அழைக்கப்பட்டனர். அங்கு அவர்கள் நள்ளிரவு வரை கலந்துரையாடினர். இரண்டு நாள்களுக்குப் பின்னர் தேசிய ஒருங்கிணைப்பு வேலைத் திட்டத்துடன் தொடர்புடைய - சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்ட சுமார் 30 அமைப்புகள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டன.

சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதும் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் எனவும் கோரி ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வது என்ற விடயம் அங்கு ஆராயப்பட்டவற்றில் முக்கியமான விடயங்களாகும்.

அதனைத் தொடர்ந்து அந்த 30 அமைப்புகளும் ஒன்றிணைந்து பத்திரிகையாளர் மகாநாட்டைக்கூட்டி, தற்காலிகமாகவேனும் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். "சமாதானத்திற்கான ஒரே வழி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதே" என்ற வாசகத்துடன் அந்த அமைப்பினால் சுவரொட்டிகள் அச்சிடப்பட்டன. பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட இணை அமைப்புகள் கொழும்பு நகரில் பரவலாகக் கூட்டங்களை நடத்தி இந்தக் கருத்தை வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்பாக "தினமின" பத்திரிகையில் வெளியான மக்கள் கருத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என்றே அதிகமானோர் கருத்து வெளியிட்டிருந்தனர். ஆனால் அரச செய்தியூடகங்கள் தங்களது செய்திகளில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே தடை நீககப்படும் எனத் தெரிவித்தன.

அவ்வாறு இருந்தபோதிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான சிக்கல்கள் அதிகரிக்கவே அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என எவராவது கூறின் அவ்வாறானவர்கள் தேசத்தின் கொடிய துரோகிகள் எனப் பதில் ஜனாதிபதியாகக் கடமை ஆற்றிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இடி முழக்க ஓசையில் எடுத்துக்கூறினார். இதனை அடுத்து சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் அரசின் ஆதரவுடன் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் எனத் தெரிவித்த அமைப்புகளின் கூட்டமைப்பினர் பிரதமரின் இடிமுழக்கத்தை அடுத்து கொடிய தேசத் துரோகிகளாயினர். அரச செய்தி யூடகங்களும் உடனடியாகத் தங்களது "ரெக்கோட்டை" மாற்றி விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையானது, எதிர்க்கட்சியும் விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் சதி என கோஷ்டி கானம் பாடத் தொடங்கின. தற்போது ஒருங்கிணைப்புக் கூட்டமைப்பு மௌனம் சாதிக்கிறது. அச்சடிக்கப்பட்ட 'போஸ்டர்'கள் தேங்கிக் கிடக்கின்றன.

இந்த உதாரணங்கள் எங்களுக்கு எதை எடுத்துக் கூறுகின்றன? நாட்டின் எதிர்காலத் தேவைகளை அன்றாடத் திடீர் பிரச்சினைகளுக்காகத் தாரைவார்ப்பதற்கு இந்நாட்டு அரசியல்வாதிகள் தயாராக உள்ளனர் என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளத் தேவையான சமூக, அரசியல் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டிய தேவைகள், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிரான இனவாத அரசியலுக்குப் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ள. விடுதலைப் புலிகளின் மீதான தடை தொடர்பாக நேர்மையாகக் கவனத்தில் எடுப்பது மாத்திரமன்றி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கும் அரசு தயாராய் இருந்தது. இருப்பினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பங்காளிகளான தமிழ் அரசியல் கட்சிகளை அச்சுறுத்துவதற்காகவும் ஐ.தே.கட்சிக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதற்காகவும் இனவாதத்தை நோக்கிச் சறுக்கிச் செல்வது என அரசு தற்போது தீர்மானித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது - என்ன வழிகளைப் பின்பற்றப் போகிறது போன்ற தகவல்களை அரச செய்தியூடகங்கள் மூலமே நாம் அறியவேண்டியுள்ளது. உண்மையில் அரசின் வழிவகைகளை சுலபமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

தமிழ் அரசியல் களத்தில் தொடர்ந்து நிலைநிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக அரச செய்தியூடகங்கள் கட்டவிழ்த்துவிட்டுள்ள எதிர்ப்புகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்வோமாயின், தமிழ் மக்களின் அனைத்து அரசியல் கட்சிகள், அரசியல் குழுக்களுக்கும் இனவாதிகள் எனக் குறிசுட பொ.ஐ. முன்னணி அரசு தயாராகவுள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது. டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. ராணுவத்தைத் தவிர வேறெந்த தமிழ் அரசியல் கட்சிகளுடனோ அல்லது தமிழ்க் குழுக்களுடனோ சுமுகமான - திறந்த அடிப்படையில் பேச்சுக்களை மேற்கொள்ள பொ.ஐ.முன்னணிக்குள்ள இயலாமையே இதற்குக் காரணமாகும். இதையும் விட அப்படி ஒரு தேவை அரசுக்கு உருவாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை தமிழ் மக்களுக்கு எதிரான - சிங்கள இனவாதமே என பொ.ஐ.முன்னணி அரசு தீர்மானித்துள்ளது என்பதை அரச செய்தியூடகங்களை நோக்கும்போது இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

இவ்வாறான ஊடகங்களின் தூரதரிசனமற்ற பிரசாரம் காரணமாக சிங்கள மக்களின் அமைதித் தீவு குறித்த எதிர்பார்ப்புக்கள் சிதைவடைந்துள்ளன என்பதைப் புரிந்துகொள்ள விசேட அரசியல் ஞானம் தேவையில்லை. அதைப்போலவே இவ்வாறான பிரசாரங்கள் காரணமாக அரசு மீது தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மேலும் பாதிப்படைகிறது என்பதும் உண்மையே.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு உருவான வினாக்களுக்கு விடைகாணாது, அதற்குப் பதிலாக மீண்டும் யுத்தத்தை "பிச்சைக்காரனின் புண்ணைப் போல" பயன்படுத்த அரசு முயற்சிப்பதும் மிகவும் கவலைதரும் விடயமாகும். இவ்வாறான அரசியல் பிரசாரங்கள் காரணமாக சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையேயான பரஸ்பர அவநம்பிக்கை மேலும் வலுப்பெறுவதுடன் சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் அருகிப்போகும்.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் தேவைக்காகவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கின்றன என பொ.ஐ.முன்னணி மேற்கொள்ளும் பிரசாரங்கள் மீது அவர்கள் நம்பிக்கை வைப்பார்களேயாயின் இவ்வாறான நிலைமை உருவாகுவதற்குக் காரணம் தங்களின் கடந்த 7 ஆண்டு ஆட்சியின்போது இழைத்த தவறுகளே என்பதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். 1994இல் இருந்து பலகாலம் இந்தத் தமிழ்க்கட்சிகள் பொ.ஐ.முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கிவந்துள்ளன.

தமிழ்க் கட்சிகளுக்கு எதிராக மாத்திரமன்றி ரவூப் ஹக்கீமின் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராகவும் பொ.ஐ.முன்னணி மேற்கொள்ளும் பிரசாரங்கள் தூரதரிசனமற்றவை.

கடந்தவார ஆரம்பத்தில் ஜனாதிபதியின் சிரித்த முகத்துடன் கூடிய அழகிய போஸ்ரர்களில் "இனவாதத்திற்கு இடமளிக்காத ஜனாதிபதிக்கு எமது நல்வாழ்த்துக்கள்" என அச்சிடப்பட்டிருந்தது. இந்த அரசியல் இதுவரை இழுத்தடிக்கப்பட்டதற்கு சிங்கள இனவாதிகளே காரணமாகும்.

கடந்த 3 அல்லது 4 ஆண்டுகளாக முஸ்லிம் மக்கள் மீது சந்தேகம் கொள்ளும் விதத்தில் சிங்கள இனவாத நடவடிக்கைகள் பல இடம் பெற்றுள்ளன. இந்த இனவாத நடவடிக்கைகளுக்குச் சமாந்தரமாக நாடெங்கும் அடிக்கடி முஸ்லிம் விரோத வன்முறைகள் வெடித்தன. இந்த இனவாதப் போக்கிற்கும், இடம்பெற்ற வன்செயல்களுக்கும் நேரடியான தொடர்புகள் இருப்பினும் இல்லாவிடினும் ஒன்றால் ஒன்று போஷிக்கப்பட்டன.

முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராகத் தற்போது பொ.ஐ.முன்னணி மேற்கொண்டுவரும் தாக்குதலுக்கு அடிப்படையும் முஸ்லிம் விரோத எண்ணத்திலிருந்து உதித்ததே ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர போன்ற பொ.ஐ.முன்னணி அரசியல்வாதிகளிடமிருந்து இவ்வாறான குறுகிய - தூரதரிசனமற்ற இனவாத அரசியலுக்கு ஒத்துழைப்பும் பின்பலமும் கிடைப்பது தாங்கமுடியாத வேதனையை அளிக்கிறது. 2000ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக பொ.ஐ. முன்னணி கொள்கையற்ற கீழ்த்தர நடவடிக்கைகளில் ஈடுபட்டதை நாம் கண்டோம்.

ஐ.தே.கட்சி இன்று ஆட்சியில் இல்லாவிட்டாலும் கடந்த காலத்தில் அவர்களும் நரகக்குழிகளில் நீந்தியவர்கள்தான். ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளன என மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் பொ.ஐ.முன்னணியின் முக்கிய அரசியல் சுலோகமாக அமைந்தது. இது சில சம்பூர்ண இனவாதமாகும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக உருவான அரசியல் உடைவும் காரணமாக ஏற்பட்ட திசைத்திருப்பங்களால் நீண்டகாலத் தீர்வு எதையும் தோன்றாத யுத்தத்தில் சிக்கித் தவிக்கின்றோம். யுத்தத்தைத் தொடர்வதைத் தவிர அந்த யுத்தத்திற்கு தீர்வினைக் காண்பதற்கான சாதகமான அல்லது ஆகக் குறைந்தது, பிரச்சினையை மேலும் சிக்கலாக்காமல் விடுவது போன்ற எதையும், நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்நோக்கும் பொ.ஐ.முன்னணி தயாரித்துள்ள தந்திரங்களில் அடங்கவில்லை.

2000 ஆண்டும் பொதுத் தேர்தலில் எவ்வாறாயினும் பதவிக்கு வர வேண்டும் என்பதே பொ.ஐ.முன்னணியின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. அதனால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உருவான பாதிப்புக்களில் இருந்து நாம் இன்றும் விடுபடவில்லை.

இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்நோக்குவதைத் தவிர வேறு எந்த மார்க்கமும் பொ.ஐ.முன்னணிக்கு இல்லை. எவ்வாறாயினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்தால் அல்லது தோல்வியுற வைத்தால் இனவாத - யுத்தவாத அரசியலின் ஒத்துழைப்புடன் ஆட்சியில் தொடர்ந்து இருப்பதே பொ.ஐ.முன்னணியின் திட்டமாகும். இந்தத் திட்டத்தால் உருவாகும் பயங்கரமான எதிர்விளைவுகளால் பாதிக்கப்படவுள்ளவர்கள் இந்த விசப் பிரசாரத்தை உருவாக்கி அதனை மேற்கொள்ளும் அரசியல்வாதிகளோ அல்லது பிரசாரங்களுக்குப் பொறுப்பான முக்கியஸ்தர்களோ அல்ல. பதிலாக இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களுமே பாதிக்கப்படுவர். எனவேதான் நாங்கள் இந்தக் குறுகிய நோக்குடைய இனவாத - யுத்தவாதப் பிரசாரங்களை எதிர்க்க வேண்டும். இந்தப் பிரசாரங்களை நம்பி ஏமாறக்கூடாது.

பொ.ஐ.முன்னணிக்குத் தொடர்ந்தும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உண்டா அல்லது இல்லையா என்பதை உரைத்துப் பார்க்கும் வேளை இது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடந்த காலங்களில் பொ.ஐ.முன்னணி அரசுக்கு ஆதரவை வழங்கிவந்த தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் இம்முறை அரசை எதிர்க்கின்றன. சிறுபான்மை இனங்களின் கட்சிகளுக்கு ஆட்சியில் இருக்கும் அரசுக்கு மாத்திரமே ஒத்துழைப்பை வழங்க உரிமையுண்டு என்பது இனவாதத்தின் பயங்கர வடிவமாகும்.

சந்திரிகா குமாரதுங்க அரசு இந்த நிலைமைகளுக்குத் தலைமைத்துவத்தை வகிப்பது மாத்திரம் எமக்கு வேதனை அளிக்கவில்லை. இந்த அரசியலின் நேரடிப் பயனைப் பெறுபவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே எனக் கூறப்படுவதே மனதுக்கு வேதனை அளிக்கிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்பட முன்னரே பிரபாகரனுக்கு புள்ளி வழங்குவதற்கு அவரைநோக்கி மேலும் மேலும் தமிழர்களை விரட்டியடிக்கும் பணியை ஆரம்பித்தது பொ.ஐ.முன்னணியே ஆகும். சரியாகக் கடந்த 7 ஆண்டுகள முழுவதும் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் அழிக்கும் நோக்கில் செலவிடப்பட்ட மனிதவளம் மற்றும் நிதிவளம் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளாது அவர்கள் (அரசு) மாத்திரமே நன்மை பெற்றனர்.

**தமிழில்: கஜனி**

அதுமாத்திரமன்றி, குறுகிய நோக்கத்தைக்கொண்ட இந்த யுத்த கோஷங்களால் இந்தியாகூட தனது கவலையைப் பகிரங்கமாக வெளியிடத் தயாராகிவிட்டது. வகை தொகையில்லாத விமானத் தாக்குதல்கள் மற்றும் சமாதான முயற்சிகளைக் கைவிடுதல் ஆகியன தொடர்பாக இந்திய அரசு தனது கவலையைப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளது. இந்த முயற்சிகள் (வான தாக்குதல்கள்) சமாதான முயற்சிகளை முற்றிலும் பாதிக்கும் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நிலைமைகள் உருவாவது அரசுக்கு மாத்திரமன்றி எதிர்க்கட்சிக்கும் நல்லது அல்ல. சுருங்கக் கூறின் இவ்வாறான நிலைமைகள் நாட்டின் எதிர்காலத்திற்கும் நல்லது அல்ல. ☆


**விண்ணக வாழ்வின்**

**41ஆம் நாள் நினைவஞ்சலியும்**

**நன்றி நவிலலும்**

**ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**

மலர்வு
31 - 01 - 1931



உதிர்வு
10 - 06 - 2001

அமரர்

**சாமுவேல் சிமியோன்** (கந்தையா)

(மேற்பார்வையாளர், இலங்கை புகையிரதத் திணைக்களம்)

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்,
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக்
காத்துக் கொண்டேன்." (2 திமோ: 4-7)

கருணைத் தெய்வமே இறைவா! உமது அடியானாகிய சாமுவேல் சிமியோனுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.......

அன்னாரின் இறுதிக்கிரிகைகளில் கலந்துகொண்டும் தொலைபேசி, தந்தி மூலம் தொடர்புகொண்டும், நேரில் வருகை தந்து எமது துன்பத்தில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், குருமார், அருட்சகோதரிகள், புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்கள், அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிராம அலுவலர், அயலவர் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

அத்தோடு நாளை (20.07.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு மல்வம் புனித திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெறுகின்ற இரங்கல் திருப்பலியிலும் அதைத் தொடர்ந்து அன்னாரது வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*"பூங்குன்றம்"*
*68, ஞானப்பிரகாசர் வீதி,*
*மல்வம், உடுவில், சுன்னாகம்.*

(90193)

# நாம் இழந்துவிட்ட பலவற்றை ஆவணப்படுத்தியுள்ள அரிய நூல்

## அருணோதயக் கல்லூரி நூல் வெளியீட்டு நிகழ்வில் உரை

வலிகாமம் தெற்கு,ஜூலை19

"கடந்த கால நிகழ்வுகளையும் இக் காலத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதையும் எதிர் காலச் சந்ததிக்கு எடுத்துக் கூறக் கூடிய ஆவணப்படுத்தப்படும் ஒரு ஏடாக 'பூச்சொரியும் பொன்னொச்சி மரம்' என்ற இந்நூல் அமைகின்றது. நாம் பல விடயங்களை இழந்து கொண்டிருக்கின்ற, இழந்த ஒரு கால கட்டத்தில் வாழ்கின்றோம். பல விடயங்கள் ஏற்கனவே அழிக்கப்பட்டுவிட்டன - மறைக்கப்பட்டுவிட்டன. ஆகவே அழிந்தவற்றையும் மறைந்தவற்றையும் தேடவும், தற்போது இருக்கின்றவற்றைப் பாதுகாக்கவும் வேண்டிய ஒரு தேவை எமக்கு இருக்கின்றது. அந்த வகையில் இந்த நூல் பல விடயங்களை ஆவணப்படுத்தி நமக்குத் தந்துள்ளது."

அளவெட்டி அருணோதயக் கல்லூரி கனடா கிளையினரால் வெளியிடப்பட்ட 'பூச்சொரியும் பொன்னொச்சி மரம்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக உயர் பட்ட ஆய்வுப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நூல் வெளியீடு அதிபர் கி.மகேந்திரராசா தலைமையில் அண்மையில் பாடசாலையில் இடம் பெற்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

கோயிலுக்கு அருகில் பாடசாலை அமைய வேண்டும். கோயில் எமக்கு ஞானத்தை தரும். அந்த ஞானத்தை பெற அறிவு அவசியம். கல்லூரிகள் அறிவை வளர்க்கின்றன.

உலகப் புகழ் பெற்றவர்கள் பலர் ஒரு வகையிலே இந்த ஊரின் எச்சங்கள். அவர்கள்தான் இந்த ஊரின் சிறப்பை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

அளவெட்டியைச் சேர்ந்த பல கலைஞர்கள், அறிஞர்கள் பற்றிய பல செய்திகள் இந்நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை மாணவர்களுக்கு மட்டுமல்ல எதிர் கால சந்ததியினருக்கும் பயனுள்ளவையாக அமையும்.

அளவெட்டி உழைத்தமை, விளைந்தமை, விரிந்தமை, நினைத்தமை, இழந்தவை, இருப்பவை என பல அம்சங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இதில் இழந்தவற்றை மீள்வதற்கு கனடா வாழ் அளவெட்டி மக்கள் தம் பங்கினை வழங்கி வருகின்றனர். பழைய மாணவர்கள் தம் கல்லூரி வளர்ச்சிக்கு நிதி வழங்குகிறார்கள். சமய நம்பிக்கை, ஈடுபாடு உடையவர்கள் கோயில்களுக்கு நிதி வழங்கி கோயில்களை வளம் படுத்துகின்றனர். சமூக மனநிலை உடையவர்கள் சமூக மன்ற நிலையங்களுக்கும், மனித நேயமுடையவர்கள் நோயினாலும் வேறு பல கஷ்டங்களாலும் பாதிப்புறுவோருக்கு, குழந்தைகள் பராமரிப்புக்கும் உதவி வருகிறார்கள்.

தமிழ் மக்களின் நன்றிக் கடன், அன்பு எப்படி இருக்கிறது என்பதை ஒரு வகையிலே எடுத்துக் காட்டும் ஓர் ஆவணமாகவும் இந்நூல் அமைகிறது. இதனை உருவாக்கித் தந்த கனடா பழைய மாணவர் சங்கத்தினருக்கு தமிழ் மக்கள் நன்றி கூற வேண்டும் - எனக் கூறினார்.

நூலின் அறிமுக உரையை திருமதி கோகிலா மகேந்திரராசா நிகழ்த்தினார்.

ஆசியுரையை கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வண. பிதா.அசோக்குமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

கவிஞர் சோ.பத்மநாதன் நூல் ஆய்வுரையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் சில குறிச்சிகள் மனதைவிட்டகலாதவை. இனுவில், அளவெட்டி அவற்றுள் சில. இந்தியாவில் கோயில்களைச் சுற்றி இசையாளர்கள், கலைஞர்கள் வாழ்வது போலவே இங்கும் வாழ்கின்றனர். என்.கே.பத்மநாதன், பாலகிஷ்ணன், சிதம்பரநாதன், தட்சணாமூர்த்தி, வி.கே.நடராஜா மற்றும் சிற்பத்துறை வல்லுநர்கள் த.சிவராசா, சிவப்பிரகாசம் போன்ற கலைஞர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன - என்றார்.

இளைப்பாறிய அதிபர் - சைவப் புலவர் சு.செல்லத்துரை ஆய்வுரை நிகழ்த்தியபோது-

வாழ்க்கையோடு வாழ்க்கையாக எமது இதயத்தில் மலரும் நல்ல இயல்புகள்தான் பண்பாடு எனப்படுகிறது. ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லும் பழக்க வழக்கங்களையும் பண்பாடு எனலாம்.

எமது சமுதாயத்திலே ஒரு குழப்பமான நிலை இன்று காணப்படுகின்றது. இதனை நல்ல முறையிலே பண்பான வழியிலே நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு அறிவுசார் பெரியோர்கள், சான்றோர்களுக்கு உண்டு. எமது முன்னோர் தந்த பண்பாடு இவை என்பதை சகலரும் சிந்திக்க வைக்கக் கூடியதாக இந் நூல் அமைந்துள்ளது - எனக் கூறினார்.

கல்லூரி அதிபர் கி.மகேந்திரராசா தனது தலைமையுரையில் -

அளவெட்டியில் வாழ்ந்த, வாழ்கின்ற கலைஞர்கள், வைத்தியர்கள், அறிஞர்கள் பலரை அறிமுகப்படுத்துவதாக இந்த நூல் அமைந்தாலும், அவர்களைப் பற்றிய பல்கலைக்கழக ஆய்வுக்கு இதனைத் தேடிப் படிக்கும் நிலையில் இருப்பது பெருமைக்குரியது - எனக் கூறினார்.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகராயகம் போல், பிரதேசசபை தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் உட்பட பலர் உரையாற்றினர்.(ஐ-152)



மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளையின் 40ஆவது ஆண்டு நிறைவு விழா அன்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆசியுரை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)

### ஜூன் மாத நிவாரணம்

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கான ஜூன் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்களை விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

குடிசன மதிப்பீட்டுப் பணிகள் இங்கு இல்லை, ஆனால்

# குடாநாட்டில் அரச ஊழியர்கள் அரை நாளுடன் வீடு சென்றனர்!

யாழ்ப்பாணம்,ஜூலை19

குடிசன மதிப்பீட்டுப் பணிகள் குடாநாட்டில் நேற்று முன்தினம் நடைபெறாத போதிலும் அரச திணைக்களங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் அனைத்தும் அன்று நண்பகலுடன் மூடப்பட்டன.

நாட்டில் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவாக அன்று நண்பகலுடன் அரைநாள் விடுமுறை வழங்கப்படுவதாக குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்திருந்தது.

குடாநாட்டில் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் முற்றாக நடைபெறவில்லை. அதேபோன்று வடக்கு - கிழக்கில் பெரும்பாலான பிரதேசங்களில் திட்டமிட்டபடி நேற்று முன்தினம் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் எவையும் இடம்பெறவில்லை.

எனினும் குடாநாட்டில் நேற்று முன்தினம் அரச அலுவலகங்கள் அனைத்தும் நண்பகலுடன் மூடப்பட்டு அரச உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். அதனால் அலுவலகங்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

குடிசன மதிப்பீட்டுப் பணிகளை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை அரச ஊழியர்களுக்கு அரைநாள் விடுமுறையை அரசு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (க-6)

### செட்டிகுளத்தில் கைதான இருவரும் அ'புரம் சிறையில்!

வவுனியா,ஜூலை19

வவுனியாவில் இருந்து செட்டிகுளம் பகுதிக்குத் தொழிலுக்குச் சென்றபோது கடந்தவாரம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இருவர் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிவசம்பு கிருஷ்ணமூர்த்தி, கருப்பையா ரவீந்திரன் ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர். (க-9)

## றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஒருவார கறுப்புப்பட்டிப் போராட்டம்

கொழும்பு,ஜூலை19

றுகுண பல்கலைக்கழக மாணவர்கள் ஒருவாரகால எதிர்ப்புப் போராட்டத்தை கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பித்துள்ளனர். மாணவர்கள மூவரை இரண்டு ஆண்டுகளுக்கு இடைநிறுத்தியதை ஆட்சேபித்தே மேற்படி போராட்டம் நடத்தப்படுகிறது.

வளாகப் பகுதிகளில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. மாணவர்கள் கைகளில் கறுப்புப்பட்டி அணிந்து விரிவுரைகளுக்குச் செல்கின்றனர். இவ்வாரத்தில் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் நடைபெறும் என்று மாணவர் கவுன்சில் தலைவர் ரவீந்திர முதலிகே தெரிவித்தார். வளாகத்தினுள்ளேயே எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி மாணவர் குழுக்களுக்குள் மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மூன்று பேராசிரியர்கள் அடங்கிய ஒழுக்காற்றுக்குழு மேற்படி மாணவர்களை இடைநிறுத்தும் தீர்மானத்தை எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

### பங்கீட்டு அட்டைக்கு மா விநியோகம்

அரியாலை,ஜூலை19

நீர்வேலி ப.நோ.கூ. சங்கம் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு இரண்டு கிலோ மாவை வழங்கி வருகின்றது.

சங்கத்தின் சகல கிளைகளிலும் மா பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.(க-17)

## வாகனத் தரிப்புக்கு 'ரிக்கற்' தொகையில் இரு மடங்கு அறவிடுவதாகப் புகார்

சுன்னாகம்,ஜூலை19

தெல்லிப்பழைப் பகுதியல் கப்பற் பயணிகளை ஏற்றிவரச் செல்பவர்கள், அங்குள்ள பாதுகாப்பு நிலையத்தில் வாகனங்களை விடுவதானால், அச்சடிக்கப்பட்ட 'ரிக்கற்'றின் இரு மடங்கு தொகையைக் கொடுக்க வேண்டியுள்ளது என்று புகார் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு இந்தப் பாதுகாப்பு நிலையத்தில் நான்கு ரூபா அறவிடப்படுகிறது.

வலி.வடக்குப் பிரதேச சபையினர் இது விடயத்தில் நடவடிக்கை ஏதும் எடுக்காதது குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-27)

### தேவாலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை19

தென்னிந்தியத் திருச்சபையின் சங்கானை தேவாலயம் புனரமைக்கப்பட்டு அண்மையில் பேராயர் அதி வண. கலாநிதி எஸ்.ஜெபநேசனால் திறந்துவைக்கப்பட்டது. (ம)

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் சங்கத் தலைவர் வி.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு சகல கிரிக்கெட் மத்தியஸ்தர்களையும், புதிதாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களையும் சமுகம் தருமாறு யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கச் செயலாளர் சு.சிறீகாந்தன் கேட்டுள்ளார். (உ)

### செய்தியாளர் விசாரணை

கிழக்கிலங்கை செய்தியாளர் ஜி. நடேசன் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் மட்டக்களப்பில் படை இணைப்பதிகாரியினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பக்கச்சார்பாக இவர் செய்திகளை வழங்கி வருகிறார் என்ற சந்தேகத்தில் கைதான நடேசன் சுமார் 45நிமிடம் விசாரிக்கப்பட்டு எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது (க-3-ஒ)

# மாவைக் கந்தனின் மலரடி பணிந்து பிறவிப் பிணி தீர வகை செய்வோம்

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் மாறி சாபவிமோசனம்பெற்ற தீர்த்தத்தையுடைய இத்திருத்தலம் காங்கேசன் துறைக்கு அண்மையில் அமைந்துள்ளது. தேவர்கள் சிறைமீட்ட செந்தூர்ச் செல்வனான முருகப் பெருமான் இங்கு எழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களின் இன்னல் தீர்த்து இடுக்கண் களைந்து, துன்பந்துடைத்துத் திருவருள் புரிகின்றார்.

இன்று திருத்தேரிலே வள்ளி தேவசேனா சமேதராக எம்பெருமான் ஆரோகணித்து வீதிவலம் வருங் காட்சி மிகவும் கோலாகலமானது. ஆன்மாக்களுக்காக இறைவன் பஞ்ச கிருத்தியங்களையும் புரிகின்றார். ஆலய மஹோற்சவமானது ஐந்தொழிலையும் குறிப்பதாகும்.

இன்றைய தேர்த்திருவிழா அழித்தலைக் குறித்து நிற்பதாகும். முருகப்பெருமான் அரக்கரை அழிப்பதற்கென்றே உதித்து வந்தவனாவான். அவ்வாறு அகோர ஆக்ரோஷத்துடன் ஆறுமுகப்பெருமான் தீயவற்றை அழிப்பதற்கென்றே அழகுப்பவனி வரும் அமையான காட்சி இத் தேர்த் திருவிழா.

பக்தர்களின் "அரோஹரா" கோஷம் வானைப் பிளக்க, காவடிகள், கற்பூரச்சட்டி ஏந்தி, நேர்த்திக்கடன்களைப் பூர்த்தி செய்வோர் "முருகா, முருகா" என்று பக்திப் பரவச மேலீட்டின்

## இன்று மாவிட்டபுரம் தேர்த்திருவிழா

மிகுதியினால் ஆனந்தக் கூத்தாடி வரும் அற்புதக் காட்சியை வேறெங்குமே காணமுடியாது.

மாருதப்புரவீகவல்லியின் காலத்தற் கட்டப்பெற்ற வானளாவ உயர்ந்த கோபுரம் இந்த ஆலயத்தின் மேற்கு வாசலில் அழகுறக் கம்பீரமாகத் தோற்றமளிப்பதைக் கண்டுகளிக்காதவர் இல்லை என்றே கூறலாம்.

கரைபுரண்டோடும் ஜனத்திரள் வெள்ளத்தினிடையே ஆறுமுகப் பெருமான் அழகிய ரதமானது அசைந்து ஆடி இவர்ந்து வருங்காட்சி காணக் கண்கோடி வேண்டும்.

"*செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே*" என்று அருணகிரிநாதர் கந்தரலங்காரத்திற் பாடியமை இங்கே பொருத்தமானதாகவே உள்ளது. பண்டைக்காலத்து சிற்பவிற்பன்னர்களால் கருங்கல் வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திர கூடமாக அமைந்திருக்கும் இந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் முன்னர் பஞ்சரதப் பவனி காண்பதற்கென்றே ஈழத்தின் நாலாபுறத்திலிருந்தும் பக்தர்கள் மடை திறந்த வெள்ளம்போல் இங்கே கூடிவிடுவார்கள். ஐந்து ரதங்களும் அழகிய திருவீதியில் பக்தர்களால் இழுத்து வருங்காட்சி இப்போதும் கண்முன்னே கருத்தோவியமாகத் தெரிவதை யாரும் மறுக்க முடியாது.

காலத்தின் கோலத்தால் இங்கே இன்று மக்கள் குடியிருப்புக் குறைந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அன்பர்கள் விழாக் காண்பதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். எனினும் பக்தியோடு அன்பர்கள் சென்று வழிபாடாற்றித்தி திரும்பும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதே என்று திருப்தி கொள்வதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்.

மாவிட்டபுரம் தேர்வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்தில் இடம் பிடிக்கலாம் என்று நம்முன்னோர் கூறியுள்ளதை நினைவிற்கொண்டு இன்று ஐயனின் தேரினை வடம் பிடித்திழுத்து மறுமையிலிடம் பிடிக்க வழி சமைப்போம்.

வண்ணை நிதர்சன்

வழிபடும் அடியார்களின் துயர்களையும் முருகன் தமிழ் மக்களது துன்பத்தையும் நீக்கி சந்தோஷமான புதுவாழ்வை நமக்கெல்லாம் நல்க வேண்டுமென மாவிட்டபுரத்தானை மானசீகமாகவாவது வணங்கி ஆன்ம ஈடேற்றம் பெறுவோமாக.

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 12ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சங்கானை

| | | |
|---|---|---|
| (165914ஏ) | (165914பி) | (194298ஏ) |
| (194298பி) | (194298சி) | (197072ஏ) |
| (197131ஏ) | (197159ஏ) | (197159பி) |
| (197984ஏ) | (197984பி) | (197984சி) |
| (198042ஏ) | (198130ஏ) | (198737ஏ) |
| (198862ஏ) | (198867ஏ) | (198903ஏ) |
| (198940ஏ) | (198941ஏ) | (199421ஏ) |
| (199421பி) | (199421சி) | (199421டி) |
| (199422ஏ) | (199422பி) | (199422சி) |
| (199440ஏ) | (199440பி) | (199440சி) |
| (199473ஏ) | (199474ஏ) | (199482ஏ) |
| (199491ஏ) | (199495ஏ) | (201506ஏ) |
| (201506பி) | (201518ஏ) | (201518பி) |
| (201576ஏ) | (201578ஏ) | (201578பி) |
| (201578சி) | (201605ஏ) | (20161ஏ) |
| (20161பி) | (201633ஏ) | (201633பி) |
| (201633சி) | (201648ஏ) | (201649ஏ) |
| (201649பி) | (201649சி) | (201705ஏ) |
| (201805ஏ) | (201859ஏ) | (201859பி) |
| (201859சி) | (201860ஏ) | (201860பி) |
| (201875ஏ) | (201917) | (201917பி) |
| (202042ஏ) | | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (178695ஏ) | (185113ஏ) | (195048ஏ) |
| (195892ஏ) | (195892பி) | (195892சி) |
| (196960ஏ) | (197047ஏ) | (197151ஏ) |
| (197170ஏ) | (197860ஏ) | (197860பி) |
| (197860சி) | (197970ஏ) | (197970பி) |
| (197970சி) | (197970டி) | (198030ஏ) |
| (198032ஏ) | (198659ஏ) | (198659பி) |
| (198742ஏ) | (198825ஏ) | (198825பி) |
| (198843ஏ) | (198852ஏ) | (198852பி) |
| (198921ஏ) | (198930ஏ) | (198930பி) |
| (198930சி) | (198930டி) | (199402ஏ) |
| (199403ஏ) | (199435ஏ) | (199469ஏ) |
| (199469பி) | (199469சி) | (199470ஏ) |
| (199470பி) | (199510ஏ) | (199510பி) |
| (199510சி) | (199591ஏ) | (199591பி) |
| (201474ஏ) | (201561ஏ) | (201561பி) |
| (201561சி) | (201742ஏ) | (201754ஏ) |
| (201754பி) | (201762ஏ) | (201809ஏ) |
| (201885ஏ) | (201885பி) | (201892ஏ) |
| (202019ஏ) | (202096ஏ) | (202096பி) |

### சண்டிலிப்பாய்

| | | |
|---|---|---|
| (170255ஏ) | (170255பி) | (170255சி) |
| (190648ஏ) | (193624ஏ) | (193645ஏ) |
| (193645பி) | (193645சி) | (194320ஏ) |
| (194320பி) | (194396ஏ) | (195811ஏ) |
| (195811பி) | (196069ஏ) | (196981ஏ) |
| (196981பி) | (196993ஏ) | (197162ஏ) |
| (197162பி) | (197892ஏ) | (197902ஏ) |
| (198017ஏ) | (198040ஏ) | (198040பி) |
| (198040சி) | (198161ஏ) | (198161பி) |
| (198161சி) | (198678ஏ) | (198678பி) |
| (198678சி) | (198746ஏ) | (198913ஏ) |
| (198924ஏ) | (199339ஏ) | (199339பி) |
| (199339சி) | (199239டி) | (199339ஈ) |
| (199339எவ்) | (199339ஜி) | (199352ஏ) |
| (199357ஏ) | (199433ஏ) | (199493ஏ) |
| (199494ஏ) | (201466ஏ) | (201467ஏ) |
| (201532ஏ) | (201565ஏ) | (201584ஏ) |
| (201606ஏ) | (201706ஏ) | (201706பி) |
| (201740ஏ) | (201740பி) | (201876ஏ) |
| (201893ஏ) | (201905ஏ) | (202228ஏ) |
| (202228பி) | | |

### தெல்லிப்பழை

| | | |
|---|---|---|
| (184999ஏ) | (185000ஏ) | (193567ஏ) |
| (193567பி) | (193567சி) | (193567டி) |
| (194434ஏ) | (194843ஏ) | (194843பி) |
| (194843சி) | (195119ஏ) | (201452ஏ) |
| (201593ஏ) | (201730ஏ) | (201857ஏ) |
| (201869ஏ) | | |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (181460ஏ) | (183818ஏ) | (192078ஏ) |
| (193754ஏ) | (194205ஏ) | (194205பி) |
| (196024ஏ) | (197055ஏ) | (197055பி) |
| (197127ஏ) | (197127பி) | (197127சி) |
| (197127டி) | (197874ஏ) | (198672ஏ) |
| (198693ஏ) | (198693பி) | (198693சி) |
| (198693டி) | (198758ஏ) | (198758பி) |
| (198797ஏ) | (198797பி) | (198797சி) |
| (198797டி) | (198797ஈ) | (198927ஏ) |
| (198928ஏ) | (198928பி) | (198935ஏ) |
| (199383ஏ) | (199383பி) | (199383சி) |
| (199383டி) | (199441ஏ) | (199506ஏ) |
| (199506பி) | (199518ஏ) | (199599ஏ) |
| (199599பி) | (201574ஏ) | (201618ஏ) |
| (201618பி) | (201636ஏ) | (201650ஏ) |
| (201650பி) | (201677ஏ) | (201728ஏ) |
| (201729ஏ) | (201729பி) | (201886ஏ) |
| (201886பி) | (201894ஏ) | (201897ஏ) |
| (201897பி) | (202004ஏ) | (202064ஏ) |
| (202064பி) | | |

இம் மாதம் 13ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | | |
|---|---|---|
| (178691ஏ) | (178691பி) | (192334ஏ) |
| (192334பி) | (197888ஏ) | (198704ஏ) |
| (198704பி) | (198704சி) | (198704டி) |
| (198704ஈ) | (198704எவ்) | (198794ஏ) |
| (198794பி) | (198794சி) | (198877ஏ) |
| (198949ஏ) | (199311ஏ) | (199429ஏ) |
| (199429பி) | (199430ஏ) | (199430பி) |
| (199489ஏ) | (199524ஏ) | (201588ஏ) |
| (201749ஏ) | (201749பி) | (201749சி) |
| (201811ஏ) | (201818ஏ) | (201834ஏ) |
| (201834பி) | (201834சி) | (201853ஏ) |
| (201853பி) | (202094ஏ) | (202094பி) |
| (202094சி) | (202095ஏ) | (202114ஏ) |
| (202114பி) | (202114சி) | (202133ஏ) |
| (202133பி) | (202138ஏ) | (202138பி) |
| (202158ஏ) | (202158பி) | (202158சி) |
| (202159ஏ) | (203411ஏ) | (203411பி) |
| (203426ஏ) | (203442ஏ) | (203442பி) |
| (203448ஏ) | (203448பி) | (203457ஏ) |
| (203458ஏ) | (203459ஏ) | (203459பி) |
| (203459சி) | (203470ஏ) | (203470பி) |
| (203493ஏ) | (203493பி) | (203530ஏ) |
| (203589ஏ) | | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (190520ஏ) | (190520பி) | (193283ஏ) |
| (195083ஏ) | (195830ஏ) | (195830பி) |
| (196003ஏ) | (196962ஏ) | (196962பி) |
| (196962சி) | (197005ஏ) | (197017ஏ) |
| (197951ஏ) | (197951பி) | (198762ஏ) |
| (198776ஏ) | (198776பி) | (198776சி) |
| (198776டி) | (198776ஈ) | (198776எவ்) |
| (199478ஏ) | (199538ஏ) | (201489ஏ) |
| (201489பி) | (201492ஏ) | (201492பி) |
| (201499ஏ) | (201529ஏ) | (201538ஏ) |
| (201538பி) | (201559ஏ) | (201594ஏ) |
| (201594பி) | (201646ஏ) | (201647ஏ) |
| (201678ஏ) | (201678பி) | (201679ஏ) |
| (201766ஏ) | (201766பி) | (201766சி) |
| (201810ஏ) | (201810பி) | (201823ஏ) |
| (202079ஏ) | (202082ஏ) | (202120ஏ) |
| (202120பி) | (202131ஏ) | (202137ஏ) |
| (202137பி) | (202141ஏ) | (202150ஏ) |
| (203404ஏ) | (203404பி) | (203635ஏ) |

### சண்டிலிப்பாய்

| | | |
|---|---|---|
| (185077ஏ) | (193613ஏ) | (195940ஏ) |
| (195940பி) | (197909ஏ) | (198045ஏ) |
| (198045பி) | (198045சி) | (198089ஏ) |
| (198784ஏ) | (198784பி) | (198784சி) |
| (198880ஏ) | (199378ஏ) | (199418ஏ) |
| (199418பி) | (199418சி) | (201201ஏ) |
| (201551ஏ) | (201551பி) | (201551சி) |
| (201554ஏ) | (201554பி) | (201577ஏ) |
| (201577பி) | (201592ஏ) | (201615ஏ) |
| (201638ஏ) | (201638பி) | (201692ஏ) |
| (201693ஏ) | (201693பி) | (201724ஏ) |
| (201724பி) | (201861ஏ) | (201861பி) |
| (201907ஏ) | (201907பி) | (201919ஏ) |
| (201919பி) | (201983ஏ) | (202026ஏ) |
| (202026பி) | (202026சி) | (202033ஏ) |
| (202033பி) | (202033சி) | (202041ஏ) |
| (202041பி) | (202134ஏ) | (203495ஏ) |
| (203520ஏ) | (203531ஏ) | (203531பி) |
| (203539ஏ) | (203542ஏ) | (203649ஏ) |

### தெல்லிப்பழை

| | | |
|---|---|---|
| (196947ஏ) | (197117ஏ) | (197117பி) |
| (199498ஏ) | (199520ஏ) | (201690ஏ) |
| (201690பி) | (202001ஏ) | (202001பி) |
| (202040ஏ) | (202118ஏ) | (202118பி) |
| (202118சி) | (202169ஏ) | (202216ஏ) |
| (202216பி) | | |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (185037ஏ) | (187166ஏ) | (187166பி) |
| (193507ஏ) | (193606ஏ) | (193606பி) |
| (195828ஏ) | (195887ஏ) | (195887பி) |
| (195887சி) | (195932ஏ) | (196095ஏ) |
| (197053ஏ) | (198748ஏ) | (198748பி) |
| (198748சி) | (198748டி) | (198757ஏ) |
| (199336ஏ) | (199496ஏ) | (199496பி) |
| (199496சி) | (201477ஏ) | (201478ஏ) |
| (201478பி) | (201516ஏ) | (201600ஏ) |
| (201673ஏ) | (201673பி) | (201673சி) |
| (201710ஏ) | (201710பி) | (201764ஏ) |
| (2017764பி) | (201764சி) | (201786ஏ) |
| (201787ஏ) | (201822ஏ) | (201822பி) |
| (201822சி) | (201879ஏ) | (201915ஏ) |
| (201918ஏ) | (201918பி) | (202093ஏ) |
| (202129ஏ) | (202200ஏ) | (202202ஏ) |
| (202202பி) | (202241ஏ) | (203409ஏ) |
| (203409பி) | (203409சி) | (203469ஏ) |
| (203486ஏ) | (203486பி) | (203501ஏ) |
| (203501பி) | (203501சி) | (203507ஏ) |
| (203561ஏ) | (203561பி) | (203561சி) |
| (203561டி) | (203561ஈ) | (203645ஏ) |
| (203645பி) | | |

(க-10)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஒரு காதலின் கதை

இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது அகதி முகாமைப பார்க்க வேண்டுமா? அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை ஒரு கொழும்பு வாரமலரில் எழுதும் தொடர்கதையின் இவ்வாரக் கதையை வாசித்துப் பாருங்கள். (90180)

### தவறிவிட்டது

செல்லப்பிள்ளையார் வீதி, சந்திரபுரம், சாவகச்சேரியைச் சேர்ந்த மகாலிங்கம் (வ.மகான்) ஜெயரதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.836182073V) யாழ்ப்பாணத்துக்கும் மாசியப்பிட்டிக்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், நீர்வேலி மாஸ்ரர் தொலைத்தொடர்பகத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P - 21 - 2982. (90176)

மீசாலை மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணசாமி ஏரம்பமூர்த்தி என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 091109278) 12.07.2001 வியாழன் அன்று சாவகச்சேரி ப.நோ.கூ.ச. கிளை இல.7 உடுவில் விற்பனை நிலையத்தில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சங்கக் கிளையில் ஒப்படைத்துதவவும். (90195)

### விற்பனைக்கு

குசன்செற்றி, அலுமாரி, சோக்கேஸ், மேசை, கட்டில், சாப்பாட்டு மேசை என்பன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- க.அரியராஜா, இல.143, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (90210)

## வன்னி வாசிகள் இருவர் விடுதலை

யாழ்ப்பாணம்,ஜூலை19

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் யாழ்.நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஊடாக அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

தோமஸ் ராஜ்குமார் அல்லது ரகு (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), இராமசாமி ரேணுகா (அக்கராயன், கிளிநொச்சி) ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் தொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நடைபெற்றபோது சட்டமா அதிபரின் ஒப்புதலின் பேரில் இருவரையும் யாழ்நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா விடுதலை செய்தார்.

அத்துடன் இவர்களின் சொந்த இடங்களிற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஊடாக அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு குழுவின் யாழ்.வதிவிடப் பிரதிநிதிக்கும் அறிவித்தார்.

இவர்களை அனுப்பி வைப்பதற்கான பயண அனுமதி தொடர்பான விடயங்களை விரைவில் மேற்கொள்ளுமாறு பலாலி படைமுகாமின் அதிகாரிக்கும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஜ-10)

## யாழ்.இந்துவில் ஆங்கில தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை19

நல்லூர் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தின நாடகம் மற்றும் பாடல் போட்டிகள் அனைத்தும் இன்று வியாழக்கிழமையும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த போட்டிகள் அனைத்தும் குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியிலேயே நடைபெறும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார். (க-10)

## கிணறுகள் புனரமைப்பு

வலி மேற்கு,ஜூலை19

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பத்து பொதுக்கிணறுகளைப் புனரமைத்துள்ளனர்.

மூன்று பாடசாலைக் கிணறுகளும் ஏழு பொதுமக்களின் கிணறுகளுமே புனரமைக்கப்பட்டன.(ஜ-175)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தில் 1973ஆம் ஆண்டில் இருந்து சங்கக் கடன்பகுதி முகாமையாளராகவும் பின்னர் 1982 ஆம் ஆண்டில் இருந்து சங்கப் பொதுமுகாமையாளராகவும் கடமையாற்றி 18-07-2001இல் சங்கப் பணியில் இருந்து ஓய்வுபெறும் திருமதி இந்திரமலர் லோகநாதன் அவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைக்கு நாம் நன்றி கூறுவதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ. சங்கம்,
மானிப்பாய்.

(90213)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

பிறப்பு 17 - 05 - 1919



இறப்பு 19 - 06 - 2001

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி சபாரத்தினம் சிவபாக்கியம்

எமது அன்னையின் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தாயாரின் மறைவையொட்டி நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19-07-2001) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
மகன் - ஆனந்தன்,
மருமகள் - குஞ்சு,
மகள் - தங்கேஸ்வரி,
பேரப்பிள்ளைகள் - ரேணுகா, கலினா, ஈசன், ஜெகன், றாபன்.

*130, கிராம விஸ்தரிப்புத் திட்டம், திருநெல்வேலி.*

(90218)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி தெய்வானை

மடத்தடி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி தெய்வானை நேற்று (18-07-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் சுபத்திரை, மகேஸ்வரி, புஸ்பராணி, பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணேஷ், கதிரவேலு, சின்னத்துரை மற்றும் செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும், மிலோஜினியின் (ஆனைக்கோட்டை) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2001) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
செ.புஸ்பராணி
(சகோதரி)

*மடத்தடி, சண்டிலிப்பாய்.*

(90214)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உரும்பிராயில் முதன்முதலில் அரிமாக்கழகத்தை ஸ்தாபித்தவரும், உரும்பிராய் அரிமாக்கழகத்தின் முதல் தலைவரும், 1999-2000 ஆம் ஆண்டில் அரிமாக்கழகங்களின் வலயத் தலைவராகவும், 2000-2001 ஆம் ஆண்டில் அரிமாக்கழகங்கள் 9 இன் மாவட்டத் தலைவராகவும்பதவி உயர்வு பெற்றதுடன்,

அண்மையில **அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா** அவர்களால் "தெய்வசித்தன" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவருமான

**லயன் இ.நடராசா** அவர்கள்

என்றென்றும் சுகத்துடன் இருந்து எமது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-

1. லயன் த.திருநாவுக்கரசு (இளைப்பாறிய அதிபர் குடும்பம்)
2. லயன் ச.ஏகாம்பரநாதன் (சமாதான நீதிவான் குடும்பம்)

(90217)

# யாழ். தொழில்நுட்ப மாணவர் கறுப்புப்பட்டிப் போராட்டம்!

## யாழ். பல்கலை திறக்கும்வரை தொடரும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

மூடப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மூடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்றுத் தொடக்கம் கறுப்புப்பட்டி அணிந்து விரிவுரைகளுக்கு சமுகமளித்து வருகின்றனர்.

திவ்வியனை விடுதலை செய்யக்கோரி தமது விரிவுரை வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்த தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் திவ்வியன் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

நேற்றுத் தொடக்கம் விரிவுரை வகுப்புகளுக்குச் செல்லும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து செல்வதைக் காண முடிந்தது.

யாழ். பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படும்வரை தமது மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்தே விரிவுரை வகுப்புகளுக்குச் சமுகமளிப்பர் என்று யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-6)

## கைதடியில் 'லான்ட்மாஸ்டர்' தடுத்து வைப்பு

தென்மராட்சி, ஜூலை 19

கைதடி, நுணாவில் பகுதியில் மக்கள் மீளக்குடியமராத வீடுகளிலிருந்து ஓடுகள் ஏற்றி வந்த லான்ட் மாஸ்டர்' வாகனத்தையும், வீட்டுப் பொருள்களை ஏற்றி வந்த மோட்டார் சைக்கிளையும் கைதடிச் சந்தியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தினர் தடுத்து வைத்துள்ளனர்.

தற்போது கைதடி—நுணாவிலில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர்களே இப் பொருள்களைக் கொண்டு வந்த போது பிடிபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

## படுகாயம்

தென்மராட்சி, ஜூலை 19

கப்பலுக்கு ஏற்றுவதற்காக புகையிலைச் சிப்பங்களை இழுவைப் படகுக்கு (பாட்ஜ்) தூக்கிக் கொண்டு வந்தவர் தடுக்கி விழ்ந்து படுகாயமடைந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தில் இடம்பெற்றது.

காயமுற்ற கரவெட்டி இராசகிராமத்தைச் சேர்ந்த வேலன்சின்னக்கிளி (வயது 46) மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-117)

# 11 ஆண்டுகளாக மூடப்பட்ட நிலையில் காரைநகர் மெய்கண்டான் ம. வி.

காரைநகர், ஜூலை 19

கடந்த 11 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ள காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் கடந்த திங்கட்கிழமை காரை மத்தி கிராம சேவையாளர் எஸ். கே. சிவலிங்கம் தலைமையில் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

காடுமண்டிக் கிடந்த மேற்படி பாடசாலையும், அதன் சுற்றாடற் பகுதியும் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டது.

காரை மத்தி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி செயலணி உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட சுமார் 150 பேர் இதில் பங்குபற்றினர்.

ஆண்டு 5-க்கு உட்பட்ட நூறுக்கும் அதிகமான மாணவர்கள் இப்பாடசாலைக்கு அருகில் உள்ள கிரமங்களில் உள்ளனர். ஆனால் இப்பாடசாலை கடந்த 11 வருடங்களாக இயங்காமையினால் இவர்கள் தொலைவில் உள்ள பாடசாலைக்கே கல்வி பயில்வதற்குச் சென்று வருகின்றனர்.

தொலைவில் உள்ள பாடசாலைக்கு சிறார்கள் சென்று வருவதனால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கவும் —

மேற்படி பாடசாலை இயங்காமையால் பாடசாலைக்குச் செல்லாத சிறார்களைப் பாடசாலைக்கு அனுப்புவதற்காகவும் —

காரை மத்தி கல்வி வளர்ச்சிக் கழகம் இப்பாடசாலையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதுதொடர்பாகஇப்பகுதிச் சிறுவர் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்ட பெற்றோர்கள், தீவக வலய கல்விப்பணிப்பாளர், ஊர்காவற்றுறை, பிரதேச செயலர் ஆகியோரின் கவனத்திற்கும் இது விடயத்தைக் கொண்டு வந்துள்ளனர்.

(ஐ-73)

## ஊர்காவற்றுறைக் கோட்டத்தில் தரம் - 1 மாணவர்களுக்கு சத்துணவு வழங்க ஏற்பாடு

காரைநகர், ஜூலை 19

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவது தொடர்பான கூட்டம் கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இதில் கோட்டக் கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெற்றோர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களுக்கே சத்துணவு வழங்கப்பட உள்ளதால் தரம் ஒன்றில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், பின்தங்கிய கிராமங்களில் உள்ள தரம் 2 மாணவர்களுக்கும சத்துணவு வழங்குவது என மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஐ-73)

## உயர்தொழில் நுட்ப மாணவர்களின் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற்று முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

தமது விரிவுரை வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்த பகல் நேர மற்றும் மாலை நேர வகுப்பு மாணவர்களை மீண்டும் வழமையான நேர சூசியின்படி விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

[க-6]

## நீதிமன்றில் ஆஜர்படுத்ததவறியமைக்காக மகனை பிணை எடுத்த தந்தை சிறைத் தண்டனை பெற்றார்

தென்மராட்சி, ஜூலை 19

திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட சிறுவனைப் பிணையில் பொறுப்பெடுத்த இருவர் வழக்குத் தவணைக்கு சிறுவனை அழைத்து வந்து ஆஜர் படுத்தாதமைக்காக பிணையை ரத்துச் செய்த நீதிவான் பிணைப் பணத்தை அபராதமாக விதித்தும், அத் தொகையை உரிய நேரத்திற்குள் செலுத்தத் தவறியமைக்காக பிணையாளர் இருவருக்கும் தலா இரண்டு மாதச் சிறைத் தண்டனையும் வழங்கினார்.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமையன்று இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

திருட்டுக் குற்றம் தொடர்பாக இருபாலை சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு நிலையத்தில் வைத்திருந்த 14 வயதுச் சிறுவனை 5 ஆயிரம் ரூபாவுக்கான ஆள்பிணையில் வெளியே எடுத்த சிறுவனின் தந்தையும் அவரது நண்பருமே சிறைத் தண்டனை பெற்றவர்களாவர்.

( க - 117 )

## காய்ச்சல், வயிற்றோட்டம் பரவுகின்றன மந்திகை ஆஸ்பத்திரியில் மேலும் 6 சிறுவர் சிகிச்சைக்கு அனுமதி

தென்மராட்சி, ஜூலை 19

நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்ட மேலும் ஆறு சிறுவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வடமராட்சிப் பகுதியில் இந்நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வதிரி தேவரையாளி இடம்பெயர்ந்தோர் முகாமைச் சேர்ந்த எஸ். புவிராஜினி (வயது 8), துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஜெ. ஜெகதீபன் (வயது 6), பருத்தித்துறை ஓராம் கட்டையைச் சேர்ந்த கே. பிரணவன் (வயது 4) ஆகியோர் நெருப்புக் காய்ச்சலினாலும்—

கரவெட்டி மேற்கு கல்லுவத்தையைச் சேர்ந்த சிவராசா தர்சிகா (வயது 10 மாதம்), வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த சிவநேசன் ஜனனி (வயது 2), பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த ஆனந்தன் சுசில்ராஜ் (வயது 4 மாதம்) ஆகியோர் வயிற்றுளைவினாலும் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(க-117)

# தொழில்நுட்ப விருத்திக்கு ஏற்றவாறு கல்வி வளர்ச்சி அதிகரிக்கவேண்டும்

## மானிப்பாய் மெமோறியல் ஆண்டு விழாவில் துணைவேந்தர்

வலி. தென்மேற்கு, ஜூலை 19

ஆயிரம் பேர் ஒரு நாளில் பிடித்த மீனை இன்று இரண்டு பேர் பிடிக்கின்ற நிலைக்குத் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி—விருத்திக்கு ஏற்ப எமது மாணவர்களின் கல்விசார் வளர்ச்சியும் பலமடங்கு அதிகரிக்கவேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் 165 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை கூறினார்.

மானிப்பாய் — மெமோறியல் ஆங்கில பாடசாலை அதிபர் அ. மு. அருணாசலம் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில்—

இன்று வடக்குப் பகுதியில் ஆசிரியர்கள் முழு நிறைவான சேவையை ஆற்றிவருகின்றார்கள். ஆசிரியர்களால் வழங்கப்படும் கல்வி, அறிவுசார் பொருளாதாரமாக வளர்ந்து பொருளாதார விருத்தி ஏற்பட வழிவகுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கும் தற்போது கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. இன்று கடமையாற்றும் ஆசிரியர்கள் பாடசாலையில் மட்டும் தமது வேலைகளை மேற்கொள்ளவில்லை. வீட்டிலும் ஓய்வு நேரங்களிலும் தமது ஆசிரியப் பணியையே மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

எமது தமிழ் மாணவர்களின் பிரதான முதலீடு கல்வி. எனவே கல்விக்கான வள ஒதுக்கீடுகளை எமது பெற்றோர் மிக முக்கியத்துவம் கொடுத்து ஒதுக்கி வருகின்றார்கள். இவ்வாறான வேளையில்தற்போது கடமையாற்றும் 6 ஆயிரம் ஆசிரியர்களும் அர்ப்பண சிந்தையோடுபணியாற்ற வேண்டும்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மெமோறியல் கல்லூரி திறந்த வெளியரங்கில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அ. ஜோன்சன், சண்டிலிப்பாய் உதவிக்கல்விப்பணிப்பாளர் க. தனபாலசிங்கம், வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி இ. பாலசுந்தரம்பிள்ளை பரிசில்களையும், தங்கப்பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து 'மெமோறியல் மலர் – 6' நூல் வெளியீட்டு விழா கல்லூரி முதல்வர் அ. மு. அருணாசலம் தலைமையில் இடம்பெற்றது.

(க-185)

## திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள்

காரைநகர், ஜூலை 19

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை காரைநகர் பாடசாலைகளில் தரம் 6, 7 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையே நடத்திய திருக்குறள் மனனப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

### தரம் 6

முதலாம் இடம்:- சி. பத்மலோசினி (சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்), இரண்டாம் இடம்:- ச. அகிலன் (யாழ்ற்ரன் கல்லூரி), மூன்றாம் இடம்:- த. பிரியதர்சினி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்)

### தரம் 7

முதலாம் இடம்:- சோ. சிவறூபி (தியாகராசா ம. ம. வி.), இரண்டாம் இடம்:- த. அனுசியா (தியாகராசா ம. ம.வி.), மூன்றாம்இடம்:- ச. யாழினி (யாழ்ற்ரன் கல்லூரி).

இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு 'தேர்க்கார கந்தையா நிதியத்தில்' இருந்து பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக நல்லியக்கச்சபை செயலர் எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

(ஐ-73)

## பனம்பொருள் விற்பனை நிலையம்

காரைநகர் மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் காரைநகர் ஆலடியில் பனம் பொருள் உற்பத்தி, விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகின்றது.

மேற்படி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு 'கியூடெக்' நிறுவனம் 10 ஆயிரம் ரூபா நிதி உதவியை வழங்கி உள்ளது.

இந்தப் பனம் பொருள் உற்பத்தி, விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியைச் சேர்ந்த பல யுவதிகள் சுயதொழில் வாய்ப்புப் பெற்றுள்ளதாக காரை மத்தி கிராம சேவையாளர் எஸ். கே. சிவலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-73)

## கல்லூரி கட்டட அடிக்கல் நடும் நிகழ்வு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் விஜயம் செய்த அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் மேதகு டியூலிங் டி சிக்கேசர் மேற்படி கல்லூரியின் புதிய மூன்று மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

### தெரிவுசெய்யப்பட்ட 50 பாடசாலைகளிலும்

# மீன்பிடி, கடல் வளம் தொடர்பான பாடங்களை ஆரம்பிக்கக் கோரிக்கை

வடமராட்சி,ஜூலை19

யாழ்மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 பாடசாலைகளிலும் ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்பில் கடல்நீர் உயிர்வளத் தொழில் நுட்பம், நன்னீர் மீன்வளத் தொழில் நுட்பம் ஆகிய பாடங்களைப் போதிக்க நடவடிகக்கை எடுக்குமாறு மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடல்வளத்தோடு தொடர்புடைய இப்பாடங்களைப் போதிக்கவென யாழ்மாவட்டத்தில் வடமராட்சி வலயத்தில் 20 பாடசாலைகளும் - தீவக வலயத்தில் 12 பாடசாலைகளும் - வலிகாமம், யாழ்.வலயங்களில் தலா 9 பாடசாலைகளுமாக மொத்தம் 50 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

ஆனால் உரிய ஆசிரியர்கள் இன்மையால் இப்பாடங்கள் போதிக்கப்படுவதில்லை.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்று 1999 இல் 43 மாணவர்கள் வெளியேறியுள்ளனர். தற்போது இரண்டாவது தொகுதி மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்டுள்ளனர்.

வேலையற்றிருக்கும் முதலில் வெளியேறிய 43 மாணவர்களுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கி தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கடல்வளப் பாடங்களைப் போதிக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகிறோம் - என மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் விடுத்த கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-173)

### பஸ் நடத்துநர்கள் நியமனம்

வடமராட்சி, ஜூலை19

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்கு 6 நடத்துநர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாரதிகள், நடத்துநர் 60 பேரை வடபிராந்திய போக்குவரத்துச் சபை அண்மையில் தெரிவு செய்து நியமனம் வழங்கியிருந்தது. அதில் 6 நடத்துநர்கள் பருத்தித்துறை டிப்போவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஜ-173)

### ஏழாலை பாடசாலை கட்டடத்திறப்பு விழா சனியன்று

வலி.வடக்கு,ஜூலை19

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாடிக் கட்டடத் திறப்பு விழாவும் சுகிர்தமலர் சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் செ.சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினர்களாக வடக்கு கிழக்கு மாகாண திறைசேரி நிதிப் பணிப்பாளர் சீ.கிருஷ்ணானந்தம் பாடசாலைகள் வேலைப்பகுதிப் பணிப்பாளர் எம்.ஏ.பிரான்ஸிஸும், சிறப்பு விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தர்பரானந்தன் யாழ்மாவட்ட பாடசாலைகள் வேலைப்பகுதிப் பொறியியலாளர் கு.சிவபாலன் வலிகாமம் கல்வி வலய கணக்காளர் க.பொன்னுத்துரை, ஜி.ரி.இசற் திட்டக் கணக்காளர் பேர்சி ஜெயக்குமார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(க-86)



யாழ்,சைவபரிபாலன சபையின் பரிசளிப்புவிழா, அண்மையில் - நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலன சபைத் தலைவர், 'சுடா' எஸ்.மகேந்திரனின் தலைமையில் நடைபெற்றது. தமிழகம் திருப்பனந்தாள் ஆதீனத் தேவார இசைமணி, அருளிசையரசு, தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞான சம்பந்தன் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவதைப் படத்தில் காண்க.

# சிறுதானியப் பயிர்ச் செய்கை கட்டாக்காலிகளால் அழிவு

அராலிப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையினால் சிறுதானியப் பயிர்ச் செய்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அராலிப்பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட பம்பாய் வெங்காயச் செய்கை, சிறுதானியங்களான எள்ளு, குரக்கன், கச்சான் உற்பத்தி கட்டாக்காலி மாடுகளினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை நீக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஜ-175)

### வடமராட்சி தெற்கு மேற்கு

# பிரதேச சபை வெற்றிடங்களுக்கு ஏழு உறுப்பினர்கள் நியமனம்

வடமராட்சி,ஜூலை19

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் வெற்றிடமாக இருந்த 7 உறுப்பினர்களின் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன.

இவ் வெற்றிடங்களுக்கு ஈ.பி.டி.பியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களையும், புளொட் அமைப்பைச் சேர்ந்த இரு உறுப்பினர்களையும் யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் நியமித்துள்ளார்.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த சில்வஸ்ரர் அலெஸ்ரிக் ஜுட் (உப தலைவர்) சிற்றம்பலம் நவசோதி, செபஸ்ரியன் இராயப்பு, சின்னத்தம்பி ராஜா, தர்மராஜா ஜெயராஜா -

புளொட் அமைப்பைச் சேர்ந்த செல்வி மதுரசீலி பொன்னையா, திருமதி சுமங்கள கனகரத்தினம் ஆகிய 7 பேரும் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாவர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 18 ஆகும். (ஜ-173)

### தமிழ்மொழித் தினப் போட்டிகள்:

# மேலும் 3 முதலிடங்கள் யாழ்.மாவட்டத்திற்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை19

வடக்கு-கிழக்கு மகாணக் கல்வியமைச்சினால் அண்மையில் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்துக்கு மேலும் மூன்று முதலிடங்கள் கிடைத்துள்ளன.

ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் 14 முதலிடங்களைப் பெற்று யாழ்.மாவட்டம் முன்னணியில் உள்ளது. இறுதியாக நடைபெற்ற போட்டிகளிலும் மூன்று முதலிடங்களைப் பெற்றுத் தற்பொழுது 17 முதலிடங்களுடன் யாழ்.மாவட்டம் முன்னணியில் திகழ்கிறது.

☆ **சிந்துநடைக் கூத்து**

முதலாமிடம் - இளவாலை புனித ஹென்றியரசர் வித்தியாலயம்.

☆ **தென்மோடிக் கூத்து**

முதலாமிடம் - யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்

☆ **இசைநாடகம்**

முதலாமிடம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(க-10-48)


## காணவில்லை

### செல்வி நல்லையா கலாவதி

ஸ்ரீசாயி ஆலயம், சுதுமலை வடக்கு, மானிப்பாயில் வசித்த சித்தசுவாதீனமற்ற **செல்வி நல்லையா கலாவதி** என்பவரை 14.07.2001 சனிக்கிழமையில் இருந்து காணவில்லை. வயது 35, கடைசியாக நீலநிற கவுணில் வெள்ளைப்புள்ளிகள் உள்ள சட்டைஅணிந்திருந்தார், பொது நிறமும் 5அடி உயரமும் உடையவர். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் *ஸ்ரீசாயி ஆலயம், சுதுமலை வடக்கு, மானிப்பாய்* என்னும் முகவரியில் அறியத்தரவும்.

சே.பூபாலசிங்கம்
(ஆத்தாள்)

(90223)


### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வடமராட்சி,ஜூலை19

கரணவாய் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று வியாழக்கிழமை கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன.

கரவெட்டி பிரதேச சபையின் உடுப்பிட்டி உப அலுவலகத்தின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஜ-173)


### குடத்தனை.

*பெண்கள். குழந்தைகள் ஒருங்கிணைந்த பங்களிப்பு மேம்பாட்டுத்திட்ட பெண்கள் ஒன்றியம் நடத்திய*

## அதிர்ஷடலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - சீட்டு இல. | 1581 |
| இரண்டாம் பரிசு | - சீட்டு இல. | 3000 |
| மூன்றாம் பரிசு | - சீட்டு இல. | 388 |

முதலாம் பரிசை அன்பளிப்புச் செய்த வட.மராட்சி கிழக்கு பிரதேச சபைத் தலைவருக்கு எமது நன்றிகள்.

-பெண்கள் ஒன்றிய நிர்வாகம்.

(90220)


### காணாமற் போனோர் விசாரணை;

# 15 பேரின் உறவினர்களை அழைக்கின்றனர் சி.ஐ.டியினர்

யாழ்ப்பாணம்,ஜூலை19

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், 15 பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்களது உறவினர்களை யாழ். பொலீஸ் நிலையத்திற்கு அழைக்கின்றனர்.

காணாமற் போனோர் பெயர் விவரமும் அவர்கள் தொடர்பான சாட்சிகள் விவரமும் வருமாறு:-

★ அந்தோனிப்பிள்ளை டஸ்மின (கோவை இல. பி-442) குருநகர் - அந்தோனிப்பிள்ளை மாரியம்மா (சாட்சி)

★ வீரசிங்கம் விஜயகுமார் (கோவை இல. பி-425) கண்டி றோட், யாழ்ப்பாணம் - சின்னவன் கந்தசாமி - கண்டி றோட், கொடிகாமம்(சாட்சி)

★ சுப்பிரமணியம் முகுந்தகுமார் (கோவை இல. பி-106) இல.16, பலாலி வீதி, யாழ்ப்பாணம் - எஸ்.பொன்னுத்துரை (சாட்சி)

★ சேனாதி தர்மபாலன் (கோவை இல. பி-464) அரியாலை - தமயந்தி தபால்கட்டைச்சந்தி (சாட்சி)

★ வி.செல்வராஜ் (கோவை இல. பி-9/6) ஆனைக்கோட்டை வீதி, கொககுவில்.

★ அந்தோனிட்பிள்ளை குயின்ரன் ராஜ்குமார் (கோவை இல. பி- 9/145) இல.29ஏ, கொண்டலடி வீதி, குருநகர் - அ.றொபேட் சதீஸ்குமார் (சாட்சி)

★ பரமேஸ்வரன் அன்னலக்சுமி (கோவை இல.பி 101) வித்தியாலய வீதி, சங்கானை.

★ கந்தையா காசித்தம்பி (கோவை இல. பி-108) மீசாலை மேற்கு.

★ சரவணமுத்து சிறீதரன் (கோவை இல. பி-190) பழைய வாய்க்கால், மிருசுவில்

★ மகேஸ்வரி கணேசு (கோவை இல. பி-88) நவாலி வடக்கு.

★ அப்பன் இரத்தினம் (கோவை இல. பி-98) தொல்புரம் மேற்கு.

★ பரமநாதன் நகுலாம்பிகை (கோவை இல. பி-94) கச்சாய் வீதி, கொடிகாமம்.

★ ஆர்.மேரி றோஸ் (கோவை இல. ஏ-15) இல.15/3 டேவிட் றோட், யாழ்ப்பாணம்.

★ நவரட்ணம் யோகேஸ்வரன் (கோவை இல. பி-408) பாடசாலை வீதி, சங்கரத்தை - கந்தையா நிமல் (சாட்சி)

★ ஜே.மதியழகன் (கோவை இல. பி-102), இல.12, சுழிபுரம் மேற்கு.

(க-4)

### ஆண்டு நிறைவு விழா

வடமராட்சி,ஜூலை19

புலோலி தென்மேற்கு-தீபஜோதி சனசமூக நிலையத்தின் 27ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டுப் போட்டியும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத் தலைவர் ஆ.கி.தம்பிமுத்து தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியும், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் கலந்துகொள்வார்கள்.

(ஜ-173)


## வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை (RRAN)

மேற்குறிப்பிடப்பட்ட அதிகார சபையின் தலைமை அலுவலகம் 16/3 கேம்பிறிஜ் பிளேஸ் கொழும்பு - 07 இல் இருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

*'வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை'*
3ஆவது மாடி **B.O.I** (முதலீட்டுச்சபை) கட்டடம்,
இல.14, சேர் பாரோன் ஜெயதிலக மாவத்தை,
கொழும்பு - 01.

### தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| தலைவர் | - 386236 |
| பொதுமுகாமையாளர் / உதவிப் பொதுமுகாமையாளர் | 386238 |
| பணிப்பாளர் (நிதி) | - 386239 |
| பணிப்பாளர் (திட்டமிடல்) | - 075-343841 |
| பொது தொலைபேசி இல. | - 386249 |
| மின்அஞ்சல் | - 386237 |
| ஈ அஞ்சல் | - Charman @ itmin. Com |

**ந.வாமதேவா,**
*தலைவர்,*
*வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை.*
**(RRAN)**

(C/17478)



## கண்ணீர் அஞ்சலி

மருதங்கேணி கோட்டக் கல்விப்பணிப்பாளராகவும்
வடமராட்சி கல்வி வலயத்தில்
முறைசாராக் கல்விப் பிரிவின்
உதவிக் கல்விப் பணிப்பாளராகவும்
மாணவர் செயற்பாடுகளின் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும்
கடமையாற்றும்

**திரு.சி.நந்தகுமாரின அன்புச் சகோதரன்**

**சி.கிருஷ்ணகுமார்**

அவர்கள் ஜேர்மனியில் அகால மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

நண்பர்கள்,
*வடமராட்சி கல்வி வலயம்.*

*புலோலி.* (C/17475)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலய மாணவன்**

## செல்வன் ம.அன்ரனிராஜ்

பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டியில் 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்து தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு, பாடசாலைக்கு பெருமை தேடித் தந்ததைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவரை நெறிப்படுத்தி வழிகாட்டிய அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. T. சிவசோதி அவர்களையும், பாடசாலை சமூகத்தையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்,
நாவாந்துறை.

(90229)

---

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வேலணை தெற்கு இலந்தைவனம் பூரணை புட்கலை சமேத அரிஹர புத்திர ஐயனார் ஆலய புனரமைப்புக்கு ரூபா 200,000 நிதியும் 02.07.2001 இல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்திற்கு கொழும்பில் இருந்து 9 நவக்கிரக விக்கிரகங்களையும் உடனடியாக 72 மணித்தியாலத்துக்குள் தருவித்துத் தந்து உதவிய**



**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமும் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சருமான மாண்புமிகு கௌரவ**

## கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும்

யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

## திரு.வி.கே.குகேந்திரன்

அவர்களுக்கும்

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளருமான

## திரு.ந.மதனராஜா (மனோ)

அவர்களுக்கும்

வேலணை பிரதேச சபைத் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை அமைப்பாளருமாகிய

## திரு.ந.கருணாகரகுருமூர்த்தி (மோகன்)

அவர்களுக்கும்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை துறையூர் அமைப்பாளர்

## திரு.ஆசீர்வாதம் அன்ரனி ராஜ் (ஈசன் தோழர்)

அவர்களுக்கும்

இந்நிதி கிடைப்பதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய ஏனையவர்களுக்கும் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துக் கூறி நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவர்களது சேவை மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல ஐயப்பன் அருள் புரிவாராக!

பரிபாலன சபையினரும்
ஐயப்பன் அடியார்களும்
*அரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்*
*வேலணை தெற்கு துறையூர்.*

(90225)

---

# இதய அஞ்சலி

## அமரர் கதிரித்தம்பி குமாரசாமி

**(இளைப்பாறிய கிராமசேவை அலுவலர் - உசன்)**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் புதல்வியும், எம் சகோதர ஆசிரியையுமான

## திருமதி சோமகலா ஸ்ரீதரன்

அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக!

அதிபர், ஆசிரியர்கள்,
யா/மிருசுவில் றோ.க.வித்தியாலயம்.
இணைந்த தென்மராட்சி
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(90226)

---

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை19

சாவல்கட்டு மகாத்மா பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணியளவில் மகாத்மா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ம-185)

## பாடசாலை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,ஜூலை19

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அபிவிருத்திக்கு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 18லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து விவரமாக எடுத்துக்கூறினர்.

இதனை அடுத்தே இந்த நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து விளையாட்டு மைதானம் புனரமைத்தல், தளபாடங்களைக் கொள்வனவு செய்தல், வகுப்பறைகளைத் திருத்தம் செய்தல், குடிதண்ணீர் வசதிகள் ஏற்படுத்தல், பாடசாலைக்கான பாதையைப் புனரமைத்தல், கணனிகள் கொள்வனவு செய்தல், தொலைபேசி வசதி ஏற்படுத்தல் ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ம-173)

## பட்டதாரிகள் விவரம் பதிவு

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இதுவரை பதிவு செய்துகொள்ளாத - நியமனம் கிடைக்காத - பட்டதாரிகளை பிரதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை 'இல.34, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி'யிலுள்ள யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு சங்கத் தலைவர் வே.மணிமாறன் கேட்டுள்ளார்.

ஆண்டு ரீதியாக வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்களை சமர்ப்பிக்க வேண்டி இருப்பதால் அதற்கு ஏற்றவாறு விரைந்து பதிவினை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்

(ஐ-9)

---

## எதிர்க்கட்சிகளின்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பிரிவுகள் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் தனித்துச் செயற்படும். அவை ஒவ்வொன்றிலிருந்தும் மூன்று பிரதிநிதிகள் மத்திய அமைப்பில் இடம்பெறுகின்றனர். எனவே அகில இலங்கை ரீதியாக நாம் செயற்படுகிறோம்.

புத்திஜீவிகளும் ஜனநாயகத்தின் மீது மதிப்பு வைத்துள்ளவர்களும் கட்டாயமாக இந்தக் கிளர்ச்சி இயக்கத்திற்கு தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

(ம)


**நாகம்ஸ் சுன்னாகம்**

சரத்குமார், மீனா
சுவலட்சுமி, வடிவேல்
நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த

**மாரி** (ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30
(90219) (புதிய நேரம்)

**ராஜா யாழ்ப்பாணம்**

அநேகரின் வேண்டுகோளுக்கு
இணங்க
9 வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்

**CITIZEN சிட்டிசன்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)


---

# வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

*இடம்* :- D.M.I. முன்பாக (ஆரியகுளம்)
*காலம்* :- 20.07.2001 வெள்ளிக்கிழமை காலை 8.00மணி
*விடயம்* :- வேலையற்றோரின் இறுதிப்பெயர்ப்பட்டியல் தயாரித்தல்
*குறிப்பு* :- சமுகமளிக்கத்தவறின் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நீங்களே பாத்திரதாரிகள்.

- செயலாளர்.

(90232)

---

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் சிவசம்பு (பாண்டியன்)

(முன்னாள் தபாலதிபர்)

அல்லாரையைப் பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவசம்பு கடந்த 13.07.2001 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாவதியின் அன்புக் கணவரும் தயானந்தன் (ஆனந்தி - ஜேர்மனி), தமயந்தி(கொழும்பு), தயாபரன்(தயா - ஜேர்மனி), தயாளன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுதர்சினி(ஜேர்மனி) சரவணபவன் (அபி இம்பெக்ஸ் - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் விசாலாட்சியின் அன்புச் சகோதரனும் திருமதி புனிதவதி கந்தசாமி, காலஞ்சென்றவர்களான இராசபூபதி, திலகவதி கந்தையா மற்றும் புஸ்பவதி ஆனந்தராசா, காலஞ்சென்ற கைலாசபதி மற்றும் ஸ்ரீபதி(R.D.O, சண்டிலிப்பாய்) கருணாபதி(மம்மிடடி, சாவகச்சேரி - கனடா) ஆகியோரின் மைத்துனரும் தனேஸ்(ஜேர்மனி), யமீரா(ஜேர்மனி), சூர்யா (ஜேர்மனி), மதுமிதா(கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.07.2001 வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதி,*
*(பேர்ள்றிச் தொடர்பகம் முன்பாக)*
*மானிப்பாய்.*

தகவல்:
சி.கமலாவதி
(மனைவி)
*அல்லாரை, மீசாலை.*

(90222)

## இம்மானுவேல் ஜேம்ஸ் (விஜயன்)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் ஜேம்ஸ்(விஜயன்) 17.07.2001 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இம்மானுவேல்(யோகம்) - எமிலி தம்பதியரின் மூத்த புதல்வனும் பீற்றர் அன்ரனியம்மாவின் அன்பு மருமகனும் கனிஷ்ராவின் அன்புக் கணவரும் குமார், வதனி, பாமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

*12, செபஸ்ரியன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
இம்மானுவேல் எமிலி
(தாய்)

(90227)

## வல்லிபுரம் துரைராசா (துரை)

திருநெல்வேலி மேற்கு அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் துரைராசா(துரை) நேற்று (18.07.2001) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும், இராஜேந்திரா (இலங்கை வங்கி, கொழும்பு/வானம்பாடி அறிவிப்பாளர்), நீலா, உமாதேவி, இலங்காதேவி (ஜேர்மனி), காஞ்சனாதேவி(ஹொலண்ட்), சுரேந்திரன் (லண்டன்), நிரஞ்சனாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாவதி, சற்குணம், நித்தியானந்தம்(செல்வம்), சிவாஜா(ஜேர்மனி), பழனித்துரை (ஹொலண்ட்), புவனபாஸ்கரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் பவளம், இராசதுரை, காலஞ்சென்ற தங்கம்மா, நல்லம்மா, கமலாம்பாள், லோகாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் டிலுக்சன், சுலக்ஷன், கீர்த்தனா, லாவர்ணன், கவிவர்ணன், அனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பிரமணியம், மாணிக்கம் மற்றும் செல்லத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பத்திரகாளி கோயிலடி,*
*திருநெல்வேலி மேற்கு.*

தகவல்:
நித்தியானந்தம்(செல்வம்)
(மருமகன்)

(90224)

## சின்னத்துரை இரத்தினசோதி (பெரியராசு)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை இரத்தினசோதி(பெரியராசு) நேற்று (18-07-2001) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை - ராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் (மறவன்புலவு) மங்கையர்க்கரசி, தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தினியின் அன்புக் கணவரும் ஜசிந்தன் (றோயல் கல்லூரி கொழும்பு), கஜந்தன் (சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி (கனடா), சிவசோதி (இந்தியா), பொற்சோதி (கனடா), பரஞ்சோதி (கனடா), ஜெயசோதி (கொழும்பு), ஞானசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பேரம்பலதாஸ் (கனடா), குலசேகரம் (சுவிஸ்), ஞானசேகரம், சந்திரசேகரம், கலாதேவி, முருகேசு, ஜெயலட்சுமி, சரவணபவானந்தன், கௌதமி, ஞானசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*புன்னாலைக் கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்
ஞானசோதி
(சகோதரன்)

(90230)

# மாணவர் போராட்டத்துக்கு ஆதரவாக வன்னியில் நேற்று பூரண ஹர்த்தால்

வவுனியா, ஜூலை19

யாழ்பல்கலைக்கழகத்தைத் திறக்குமாறு கோரியும் மாணவன் திவ்வியனை விடுவிக்கக் கோரியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நேற்று முழு அளவிலான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுக் கிடந்தன.

இதனால் வன்னிப் பகுதியில் நேற்று வழமைநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ம-7-164)

## மிருசுவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு மீது வழங்கப்பட்ட உத்தரவின் பேரில் இந்த வழக்கை அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மாற்றுவதாக சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் நேற்று அறிவித்தார்.

பலத்த பாதுகாப்புடன் கைவிலங்கிடப்பட்ட நிலையில் பிரஸ்தாப சந்தேகநபர்கள் நேற்று இராணுவப் பொலீஸாரால் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

வழக்கு நேற்று எடுக்கப்பட்டதும் மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுப் பிரகாரம் வழக்கு அனுராதபுரத்துக்கு மாற்றும் பணிப்பைப் பிறப்பித்த நீதிவான் சந்தேகநபர்களை அனுராதபுரம் நீதிமன்றில் உடன் ஆஜர் செய்ய முடியாத பட்சத்தில் அவர்களைத் தம் முன் ஆஜர் செய்யுமாறு இராணுவப் பொலீஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்த வழக்கு நேற்று எடுக்கப்படுவதையொட்டி நீதிமன்றச் சுற்றாடலில் காலை முதல் பொலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. (உ-3-117-173)


NEW SCIENCE COLLEGE
யாழ்ப்பாணம்
2002 A/L
★ வினா விடை ★
★ பொது இரசாயனம் ★
திங், புதன் - 6.00 a.m.
2003 A/L
★ அசேதன இரசாயனம் ★
சனி, ஞாயிறு 10.00
ஆரம்பம்:- 21.07.2001
ஆசிரியர்
திரு.மகேஸ்வரன்.
(90233)


## விமானத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது நெருங்கிச் சென்ற போது புலிகளின் வள்ளங்களில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனை அடுத்து விமானப் படையினரின் உதவிகோரப்பட்டது. விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் வள்ளங்கள் அழிக்கப்பட்டன என ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ம-7)

## கொலையுண்டோரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்ட வேளையில் -

அங்கு குழுமியிருந்த - படுகொலை செய்யப்பட்டவர்களின் மனைவிமார், பிள்ளைகள் மண்ணை அள்ளி வீசி 'நாசமாகப் போவீர்கள்' 'துரோகிகள்' என்று திட்டி சத்தமிட்டு சோகத்துடன் கோவென அழுத காட்சி மனதை நெகிழ வைப்பதாக இருந்தது. இவர்கள் கதறி அழுத காட்சி அங்கு நின்ற ஏனையோரின் கண்களில் கண்ணீரை வரவழைத்ததையும் அவதானிக்க முடிந்தது.

இதனையடுத்து நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்திய நீதிவான், அவர்களிடம் சென்று ஆறுதல் கூறி கலைந்து செல்லுமாறு வேண்டினார். (உ-3-117-173)


ஆரம்பம்!
கம்பனி
A/L - 2002
கணக்கீடு
D.Sam
21.07.2001
பிற்பகல் 2.00 மணி
D.M.I.
யாழ்நகர்
(90215)


## ஜாவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்கும் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சமயம் அங்கு வீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த பின்னரும் தொடர்ந்து அந்த வீடுகளிலேயே தங்கியிருந்தனர். அந்த வீடுகளில் இருந்து வெளியேறுமாறு அவர்களுக்கு அவ்வப்போது கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதிகாரிகள் நேற்று இருவரின் வீடுகளுக்கும் சென்று, உடனடியாக வீட்டைக் காலி செய்யுமாறு அவர்களைக் கேட்டனராம்.

அதன் பின்னர் அவர்களின் வீட்டு உடைமைகள் சிலவற்றை வெளியே எறிந்து, இரவுக்குள் வீட்டை விட்டு வெளியேறி விடவேண்டும் என்று அந்த அதிகாரிகள் பணித்தனர் என்றும் கூறப்படுகின்றது.

நீதிமன்ற உத்தரவுப்படியே இந்த நடவடிக்கையைத் தாம் மேற்கொள்வதாக அந்த அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அறியவந்தது.

இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றத்தில் தனக்கு எதிராக வழக்கு நடந்ததே தெரியாது என்றும் -

முன்னறிவித்தல் இன்றி இந்தச் செயலில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் -

சித்தார்த்தன் கொழும்பு செய்தி வட்டாரங்களிடம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (உ-3)

## ஊர்வலங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

1981ஆம் ஆண்டின் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான 7ஆவது சட்டத்தின் 45ஆவது பிரிவின் கீழ் மேதின ஊர்வலங்கள் தவிர ஏனைய ஊர்வலங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன என்றும் லக்கி கொடித்துவக்கு அறிவித்துள்ளார். (ம-3-7)

## தெய்வேந்திரன் மீண்டும் சேவையில

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த டாக்டர் ஆர்.தெய்வேந்திரன் நேற்று மீண்டும் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கட்டாய லீவில் அனுப்பப்பட்ட இவர் தொடர்பான விசாரணைகளை கடந்த சில வாரங்களாக மாகாண அதிகாரிகள் மேற்கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து அவரை மீண்டும் சேவையில் சேர்க்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், மாநகரசபை ஆணையாளரைப் பணித்திருந்தார். (ம-3)

## ஆசிரியர் போராட்டம் ஒத்திவைப்பு

திருகோணமலை,ஜூலை19

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கில் நடத்தப்படவிருந்த ஒருநாள் சுகவீன லீவுப்போராட்டம் நடைபெறமாட்டாது என சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் நேற்றிரவு தெரிவித்தார். (ம-7)

## படமெடுத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் நீதிவான் அ. பிரேம்சங்கரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அதைத் தொடர்ந்து பிரஸ்தாப சந்தேக நபரை இராணுவப் பொலீஸார் மூலம் நீதிமன்றத்துக்கு அழைத்த நீதிவான் அவரைக் கடுமையான தொனியில் எச்சரிக்கை செய்தார்.

நீதிமன்ற பாரம்பரியங்களை மீறி நடக்கக்கூடாது என்று எச்சரித்த நீதிவான் ஊடகவியலாளரிடம் சந்தேக நபரை மன்னிப்புக் கோரும்படி பணித்தார்.

படையினரால் செய்தியாளர் தாக்கப்பட்ட இந்தச் சம்பவத்தைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

குடாநாட்டில் மக்கள் படையினரால் அனுபவித்து வரும் துன்பங்களை துணிவுடனும் நேர்மையுடனும் அம்பலப்படுத்திவரும் பத்திரிகையாளர்களின் சுதந்திரத்துக்கு ஆப்பு வைப்பது போன்றது இந்தச் செயல். இனி வரும் காலங்களிலாவது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (உ-3-117-173)

## பொலீஸ் தடைகளையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் அங்கம் வகிக்காத அரசியல் கட்சிகள் பொது அமைப்புகள் பலவும் இணைந்து அரசுக்கு எதிரான போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன. ஆறு முனைகளில் இருந்து புறப்படும் பேரணிகள் மருதானையில் கூடி அங்கு மாபெரும் கூட்டத்தையும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

பாடசாலைப் பகிஷ்கரிப்பு, கடையடைப்பு, அரச அலுவலகங்கள் பகிஷ்கரிப்பு, போக்குவரத்து நிறுத்தம் போன்ற சட்டமறுப்புப் போராட்டங்களையும்நடத்த அந்த முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

இந்த முன்னணியின் சார்பில் ஐ.தே.கட்சியின் பிரமுகர் காமினி அத்துக்கோறளை ஊர்வலம் நடத்துவதற்கான அனுமதியை பொலீஸ் மா அதிபரிடம் கோரியிருந்தார்.

ஆனால் அனுமதியை வழங்க பொலீஸ் மா அதிபர் மறுத்துவிட்டார்.

இதைத் தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தர்களான கரு ஜயசூரிய, காமினி அத்துக்கோறளை, கருணசேன கொடித்துவக்கு ஆகியோர் கூடி ஆராய்ந்தனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த காமினி அத்துக்கோறளை அரசுக்கு எதிரான போராட்டங்கள் திட்டமிட்டபடி இன்று இடம்பெறும் என அறிவித்தார்.

"அரசின் சட்ட திட்டங்கள் எல்லாவற்றையும் நாம் நன்கு அறிவோம். தற்சமயம் எதிரணியான எமக்குப் பெரும்பான்மைப் பலம் உள்ளது. எனவே எமது ஊர்வலத்தை அரசால் தடைசெய்ய முடியாது. திட்டமிட்டபடி எமது போராட்டம் இடம்பெறும்" என்று அவர் மேலும் சொன்னார்.

அதேவேளை -

ஐ.தே.கவின் முக்கியஸ்தர்கள் நேற்று இரவும் கூடி நிலைமையை ஆராய்ந்தனர் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து தமது போராட்டத்தை அரசு குழப்ப முனைந்தால் வேறொரு தினத்தில் அந்தப் போராட்டத்தை நடத்துவோம் என்று ஐ.தே.கட்சிப் பிரமுகர் காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

அதேவேளை -

தடையை மீறி இன்று போராட்டம் நடத்தப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுவர் என்று பொலீஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

இன்றைய போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்று ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேசர் ஆலயத்தில் நேற்று விசேட வழிபாடுகளை நடத்தினர். (உ-3-7)


IIS இன் மாபெரும்
கணனிக் கல்விக் கண்காட்சி - 2001
இடம் : IIS நிறுவனம், நெல்லியடி கரவெட்டி
காலம் : ஜூலை 19,20,21 ஆம் திகதிகளில்
காலை 9.00 முதல் மாலை 7.00 வரை
கணனித் தகவல் தொழில்நுட்பத்தின் பரிமாணங்களை எடுத்துக் காட்டும் வகையில் அமையப்பெற்ற கண்காட்சி
★ கணனித் துறையின் பல அற்புதங்கள் உங்கள் கண் முன்னே
★ கனவா இது நிஜமா என அதிசயிக்க வைக்கும் பல அற்புதக் காட்சிகள்
மேலும்....
IIS இன் மாணவர்களாக விரும்புகின்றீர்களா?
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்! விரையுங்கள்!!
100% கட்டண சலுகை. உங்கள் பதிவினை 19,20,21ஆம் திகதிகளில் மேற்கொள்பவர்களுக்கு மட்டுமே.
அதிரடி விலைச் சலுகையில் கணனிகள், உதிரிப்பாகங்கள்
கண்காட்சியில் சிறப்பு விற்பனை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.
19,20,21ஆம் திகதிகளில் மட்டும் சிறந்த விலைக் கழிவுடன் கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
விளம்பர அன்பளிப்பு:
மருதம் காட்வெயார்ஸ் | மருதம் பிறிண்டர்ஸ் | மருதம் கொமினிகேசன்
நெல்லியடி. மத்திய மகாவித்தியாலய வீதி, கரவெட்டி. (C/17477)



அழைப்பு
IIS
கணனிக் கண்காட்சி - 2001
இடம் : IIS, நெல்லியடி, கரவெட்டி.
காலம் : இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணி
பிரதம விருந்தினர்
திரு.சி.சிவராஜா
(கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்)
கௌரவ விருந்தினர்கள்
திரு. செ.சிறீனிவாசன்
(பிரதேச செயலர், வடமராட்சி தெற்கு மேற்கு)
வைத்திய கலாநிதி
திரு.எஸ்.கதிரவேற்பிள்ளை
(மாவட்ட வைத்திய அதிகாரி, பருத்தித்துறை)
சிறப்பு விருந்தினர்கள்
திரு.சி.பசுபதி
(செயலாளர்,வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை)
திரு. செ.கெங்காதரன்
(பொது முகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
- இயக்குநர், பயிற்சி இயக்குநர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்.
(C/17476)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.